# சிரித்திரன்



Mr. டா: நான் இலெக்ஷன் கொன்டெஸ்ட் பண்ணி, டமில் பாஷா சம அந்தஸ்துக்கு பயிற் பண்ண போறன்.

Mrs. டா: ஐயோ தெய்யனே... யூ டோ நோ யுவர் இங்லிஷ். அது நல்ல இங்லிஷ் அறிவுள்ளவங்க தான் டமிலுக்காகப் பயிற் பண்றது.


CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

நகைச்சுவை ஏடு

வைகாசி 1970

விலே: சதம் -/45.


## அதிகம் பயிரிட

## அதிகம் தண்ணீர்!

மணித்தியாலத்திற்கு 10,000 கலன் தண்ணீரை நீங்கள் விரும்பும் இடத்திலிருந்து

ஓர் ————————————————> WALKER-WOLSELEY

# நீர்ப்பாசன பம்ப் மூலம் பெறலாம்.



(2'' பெற்றேல்/மண்ணெண்ணெய் பம்ப்)

பிரசித்திபெற்ற, நம்பிக்கையான வாக்கர் வூல்ஸிலி- நீர்ப்பாசனம் மற்றும் சகல நீர் இறைப்பு வேலைகளுக்குமான பெற்றேல்/மண்ணெண்ணெய் எஞ்சின் உள்ள பம்ப்; இப்பொழுது இலங்கையில் வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் [ சிலோன் ] லிமிட்டெட்டில் தயாரிக்கப்படுகிறது.

- ☐ மணித்தியாலத்திற்கு 10,000கலன்கள்
- ☐ இயக்கச் செலவு குறைவு
- ☐ இலகுவான பராமரிப்பு.

WI ஒரு வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் தயாரிப்பு

இந்த பம்பில் ஏற்படக்கூடிய பழுதுகள் செப்பனிட்டு, பாதுகாப்பு சேவைகளும் அளிக்கப்படும் என உத்தரவாதம் பெற்றது.

## வாக்கர் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்.

## முன்முறுவல் —சுந்தர்




''பேரைச் சொல்லலாமா கணவன் பேரைச் சொல்லலாமா''



''தித்திப்பதோ கன்னம்''




''ஏமாறுதே ஏமாறுதே''



''சந்தனக் குடத்துக்குள்ளே பந்துகள் உருண்டு வந்து விளையாடுது '


## செய்யது பீடி




# செய்யது பீடி டிப்போ

**192, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.**

தொலைபேசி: 32301




**பரிசு பெறும் கேள்வி**

**பொ. பத்மநாதன், நெடுங் கேணி.**

கே: இலங்கையின் தமிழ்க் கட்சிகள் சாதித்ததென்ன?

ப: நல்ல மேடைப் பேச்சாளர்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஃ

**ம. வேதநாயகம், 112/4, சென். தோமஸ் வீதி, கொழும்பு-15.**

கே: அண்ணனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்; அதைக் கண்ட அவள் அப்பனும் நோக்கினான். - இதைச் சந்தர்ப்பம் கூறி விளக்கும் மகுடியாரே!

ப: இது அயோக்கிய காண்டத்தில் வரும், தந்தை சூழ்ச்சிப் படலத்தில் ஒரு பாகமாகும்.

ஃ

**மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.**

கே: அன்புக்கும் காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? அதைப்பற்றிச் சிறிது கூறுங்கள் பார்க்கலாம்?

ப: அன்பு, நல் அறஞ் செய்ய விரும்பும்; காதல், இல் அறஞ் செய்ய விரும்பும்.

**சு. இரத்தினபூபதி, வரணி.**

கே: இந்த உலகத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: அன்பாய் வாழ, ஒன்றையும் கண்டுபிடிக்கிறார்களில்லை; அடிபடக் கண்டுபிடிக்கிறார்கள். இப்போ ஒரு 'கராட்டி' அடி வந்திருக்குதையா.

ஃ

**க. மார்க்கண்டு, கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

கே: மகாவலித் திருப்புத் திட்டத்தால் நமக்குப் பயன் கிடைக்குமா? நாம் அதை எதிர் பார்க்கலாமா?

ப: அரசாங்கத்திற்கு இதயம் கசிந்து, யாழ்ப்பாணத்திற்கும் பொசிந்தால் நன்மையுண்டு.

ஃ

**அன்ரனி றெட்றிகோ, நீர் கொழும்பு.**

கே: இன்று மனிதனின் கவலையென்ன?

ப: தான் நூறாண்டு காலம் வாழவேண்டும் என்பதல்ல; தனது அபிமான நட்சத்திரம் நடித்த படம் நூறு நாட்கள் ஓட வேண்டும் என்பதே.

**இ. பாலசிங்கம், கொட்டடி, யாழ் நகர்.**

கே: எமது தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்கள் அத்தனைபேரும் விரும்பத் தகாதவர்களாக இருந்தால் ஓட்டை எங்கே போடுவது?

ப: திருவுளச் சீட்டில் விழும் பெயருக்கு உமது திருவாக்கை அளியும்.

கே: அரசியல்வாதிக்கும், அறிவியல்வாதிக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: அரசியலறிவு சூனியமானவன் அரசியல்வாதியாக இருக்க முடியும்; அறிவு ஆழ அகலம் உள்ளவனே அறிவியல்வாதியாக இருக்க முடியும்.

ஃ

**ச. சபாநேசன், 14, பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**

கே: மகுடியாரே! உடுதுணிகள் தாராளமாக இருக்கும் இந்தக் காலத்தில் ஏன் ஐயா, பெண்கள் ஆடைக் குறைப்பை விரும்புகிறார்கள்?


ப: ஆண்களின் பார்வை பழுதுபட்டு விட்டதென்று நினைக்கிறார்கள் போலும்.

ஃ

**எஸ். ஏசையா, 192/12, டாம் வீதி, கொழும்பு-12.**

கே: எனக்கு ஓட்டுப்போட்டால் உதவிபுரிகிறேன் என்று கூறிவிட்டு, அதை மறக்கும் எம். பி. க்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: அது வாக்கு மாறாட்டம்




**எஸ்.பி. சுந்தரலிங்கம், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.**

கே: கலைஞனின் உள்ளத்து உணர்ச்சி எத்தகையது?

ப: புனிதமானது; புதுமையானது; புரட்சிகரமானது.

⁂

**அ. சந்திரப் பிரகாசம், கட்டைக் காடு, முள்ளியன்(பளை)**

கே: மகுடி அண்ணாவே, கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கடவுள், கடிகாரங் கட்டாமலே கடமைகளைக் குறித்த நேரத்தில் செய்கிறார். மனிதன் கட்டிக்கொண்டும் தவறுகிறான்.

⁂

**கூடலூர் சந்திரன்.**

கே: பிச்சைக்காரனிடமும் திருடுபவனைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: பச்சைப் பிச்சைக்காரன்.

⁂

**கேணியூரான், நெடுங்கேணி.**

கே: தமிழினம் தலைகுனிந்து வாழ்வதேன்?

ப: குனிந்தால் குட்டார்கள் என்ற நம்பிக்கை போலும்.

⁂

**பி. பாத்திநாதர், பண்டத்தரிப்பு.**

கே: தற்கொலையை விரும்பும் உயிரினம் எது?

ப: காட்டெருமை- ரெயில் பாதையில் உயிரை விடுகிறதே.

⁂

**க. அருள்லிங்கம், நாவலப்பிட்டி.**

கே: ஆடையின்றி மனித குலம் திரிந்தால்...?

ப: 'பிக்பொக்கட்' காரருக்கு வேலையில்லாத் திண்டாட்டம் தலை தூக்கும்.

⁂

**பொ. பத்மநாதன், நெடுங்கேணி.**

கே: நடிகைகள் மறைப்பது எதை? மறைக்காதது எதை?

ப: மறைக்க விரும்புவது நரையை; விரும்பாதது நாரியை.

கே: ஓய்வில்லாத உழைப்பும், நிம்மதி இல்லாத வாழ்வும் எந்த நிலைக்கு ஒருவனை ஆளாக்கும்?

ப: நிறைந்த செல்வம்! குறைந்த ஆயுள்!

⁂

**வழிப்போக்கன், தொண்டமனாறு.**

கே: இந் நாட்டில் வரும் தினசரிகளை எதற்காகப் பிரசுரிக்கிறார்கள்?

ப: புதுப் படம் ஓடுகிறதா என்று பார்ப்பதற்கு.

⁂

**மனோஹரி செல்லையா, கட்டுவன்.**

கே: டாக்டருக்கும், எம். பி.க்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: டாக்டர், இருதய மாற்ற சிகிச்சை செய்வார். எம். பி., இடமாற்ற சிகிச்சை செய்வார்.

ஃ

**எச். எம். எம். கலீல், 61, மாவத்தப்பொலை, அலவத்துகொடை.**

கே: சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தப்படி ஈழத்தை விட்டு இந்தியா செல்லும் தமிழ் மக்களின் மனநிலை எப்படியிருக்கும்?

ப: அன்று, இறைவனின் தலையெழுத்துப்படி தான் எல்லாம் இயங்கும்; இன்று தலைவர்களின் எழுத்துப்படியே எல்லாம் இயங்கும்.

ஃ

பெ. நாகநாதன், கொம்பனித் தெரு.

கே: 'சும்மா இரு' என்பதன் தத்துவமென்ன?

ப: அரசாங்கத்தை வேலை கேளாது சும்மா இரு என்பது தான் அர்த்தம்.

ஃ

**வே. மார்க்கண்டு, பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.**

கே: என் கேள்விக்குப் பதில் எழுதிக்கொண்டிருக்கும் போது, உங்கள் பேனா எழுத மறுத்துவிட்டால்...?

ப: ... ... ...

ஃ

**மகுடி,**
மே/பா. ''சிரித்திரன்''
101/4, சென். பெனடிக்ஸ் வீதி
கொட்டாஞ்சேனை.

இதை வெட்டி ஒட்டப்பட்டு வரும் கேள்விகளே ஏற்றுக்கொள்ளப்படும். சிறந்த கேள்விக்கு **செல்வி. எல். மாலா** அவர்கள் ரூபா 5/- பரிசு வழங்குவார்கள்.



## நான்கு துப்பாக்கிகளின் நடுவே...?

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

—சரோஜினிதேவி.

டு - டு - டு - டுமீல்! நான்கு துப்பாக்கிகளி லிருந்தும் கொலை வெறி கொண்ட நான்கு குண்டுகள் குறி தவறாமல் சீறிப் பாய்ந்தன.

'ஆ...! ஐயோ...! அம்மா...!'

மூன்று கூடுகளிலிருந்தும் மூன்று உயிர்கள் பூவுலகை விட்டுப் பறந்து சென்றன.

மறு நாள்–

அடர்த்தியான யானைக் காட்டின் எங்கோ ஒரு மூலையில் இரு கரிய மனிதர்கள் நிலத்தைத் தோண்டுகின்றனர். இன்று வரை தோண்டிக் கொண்டே இருக்கின்றனர். [முற்றும்]

---

மனைவி: உங்கள் பிள்ளை வளர்ப்பு சரியில்லை. அவனெதிர்த்துப் பேசுகிறான்.

கணவன்: நல்லதுதானே! அரசியல்வாதியாக வருவான்!

\+ + +


பங்குனி இதழில் 'பள்ளிப் பகிடி' யில் பரிசு பெற்ற திரு. முருங்கன் மகேஸ்வரன் தனது முழு மூகவரியையும் அனுப்பிப் பரிசைப் பெற்றுக்கொள்ளவும்.

\+ + +

**''நாலுபேரைக் கேட்டோம்'' ''சிறப்புக் கதை'' அடுத்த இதழில் இடம்பெறும்.**

---

### விசித்திரக் கற்பனை




## அந்தக் கவிதைக்கு நாம் பரிசு தந்தோம்

கடந்த புது வருட தினத்தன்று, இலங்கை வானொலி வர்த்தக சேவையில் நாம் நடத்திய ''நகைச்சுவைக் கவிதை''ப் போட்டியில், முதற் பரிசாகிய ரூபா 15/- ஐ பெறும் கவிதை:

**திருடன் திருடி விரைந்து செல்ல;**
**திகைத்து நின்ற மனைவி யவள்**
**பதை பதைத்து ஐயோ! என்றலற;**
**பார்த்து நின்ற கணவன் கூறினான்,**
**உலகம் உருண்டை தெரியு மோடி..?**
**ஓடினால் வருவான் இங்கொரு நாளடி!**

— பெசில் பெர்னான்டோ,
82/4, செக்கடித் தெரு,
கொழும்பு - 3.

[ இரண்டாம், மூன்றும் பரிசுக் கவிதைகளும், ஏனைய சிறந்த கவிதைகளும் தொடர்ந்து வெளிவரும் ]

---

ரவி: எங்கள் வீட்டிலே இன்று வெள்ளி விழாக் கொண்டாடப் போகிறார்கள்!

ரகு: எதற்காக வெள்ளி விழா...?

ரவி: என் தம்பிக்கு இருபத்தைந்தாவது சிலேட் வாங்கிக் கொடுத்திருக்காங்க; அதற்காக!

—பொ. பத்ம நாதன், நெடுங்கேணி.

CLEARING, FORWARDING AGENTS

&

TRANSPORTERS

**COLOMBO WHARFAGE**

**&**

**TRANSPORT CO.**

274, Sea Street Colombo-11.

PHONE: 33919 or 29632

# EMPEE INDUSTRIES

TEXTILE MANUFACTURERS
&
TEXTILE YARN DYERS.

**PALLANSENA, KOCHCHIKADE.**

*Sole Distributors for Textile Products.*

**SILK PALACE, KOCHCHIKADE.**

# எம்பீ இன்டஸ்ட்ரீஸ்

புடவை உற்பத்தியாளர்கள், நூல் சாயம் தீட்டுவோர்

பள்ளன்சேனை, கொச்சிக்கடை,

ஏக வினியோகஸ்தர்கள்:

**சில்க் பலஸ், கொச்சிக்கடை.**

- சகானுகூலம் [பரிசு]
- மக்குராமன்
- நவீன இலக்கணம்




நான் க. பொ. த. (சாதாரண) வகுப்பில் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தேன்.

அன்று எங்கள் வகுப்பைப் பார்த்தளவில் எனக்கே ஆச்சரியந்தான். என்றுமில்லாத அமைதி நிலவியது. ஆசிரியர் வகுப்பறையினுள் புகுந்தார். எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவித்தோம். ஆசிரியரும் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார்

சரியாக ஒன்பது மணிக்குப் புரிசோதகர் வருவார். ஆயத்தமாய் இருங்கள். பயப்படாமல் ஆறுதலாக விடை சொல்லவேண்டும். என் மரியாதையை மட்டும் காப்பாற்றி விடுங்கள். அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் உதவியாகும். கடைசி வரிசைகளில் இருக்கும் மண்டுகளுக்கும் முடியுமானல் உதவி செய்யுங்கள் — என்று பலவாறு உபதேசித்தார்.

ஒன்பது மணியும் ஆயிற்று; மோட்டாரில் பரிசோதகரும் வந்தார். சொல்லி வைத்தாற்போல் நேராக எங்கள் வகுப்பினுள் நுழைந்தார். எல்லோரும் ஏகோபித்த குரலில் வணக்கம் தெரிவித்தோம். எங்களை அமரும்படி கூறிவிட்டு இப்பொழுது என்ன பாடமென ஆசிரியரை வினவினர். ஆசிரியர் சுகாதாரமென விடை பகர்ந்தார்.

மாணவர்களை ஒரு முறை நோட்டம் விட்ட பின்பு இறுதி வரிசையிலிருந்த மாணவனை நோக்கி- விசர் நாய் மருந்தைக் கண்டு பிடித்தவர் யார் என வினவினர். உடனே முன் வரிசையில் லூயி பாஸ்ரர் என்றெழுந்த ஒலி கடைசிக்கு முன் வரிசையில் பாச்சர் என்று மட்டும் விழுந்தது. வகுப்பின் பின்னல் நின்ற பரிசோதகருக்கு இது கேட்கவில்லை. உடனே விடையிறுக்க வேண்டிய மாணவன்- வாச்சர் என்றான்.


பயத்தால் நடுங்கிய நாங்கள் சிரிக்கவில்லை. பரிசோதகர் என்னத்துக்கு என்றார். விசர் நாய்க்கு என்றான் அந்த மாணவன். பரிசோதகரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆசிரியருட்பட அனைவரும் சிரித்தோம்.

— மீசாலைச் செல்வி

அரசடி மத்திய கல்லூரியில் எமது வகுப்பிலே புதிதாகச் சேர்ந்த ராமனென்னும் மாணவன் மிகவும் சுறு சுறுப்பானவன். ஆசிரியர் கேட்கும் கேள்விகட்குச் சரியோ பிழையோ பதில் கூறி விடுவான். அதனுல் ஆசிரியர்கள் அவனைத் தண்டிப்பதுமுண்டு.

ஒரு நாள் எங்கள் வகுப்பில் புதிதாக ஓர் ஆசிரியர் நுழைந்தார். நல்ல குண நடை இருந்தாலும் ஒரு முன்கோபியென அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தோம். அவர் முதலில் தன்னை அறிமுகப் படுத்தினர். எம்மை தனித்தனி அழைத்து- பெயர், பிறந்த தினம் (ஆண்டு- மாதம் - திகதி) விசாரித்தார். நாமும் ஒவ்வொருவராகச் சென்று பதிலளித்தோம். இறுதியாகச் சிரித்த முகத்துடன் ஆசிரியரை நெருங்கினுன் ராமன். ஆசிரியரிடம் அடி வாங்கப் போகிறுனே என்று ராமனுக்காக அனுதாபப் பட்டோம்.

ராமனே சற்றும் தாமதியாது தன் பெயரைக் கூறியதுடன் ஒன்பயிற்ருறு ஐம்பத்தி நாலு என்ருன். ஆசிரியர் முகம் சிவக்க டேய் மக்கு ராமா நீ பிறந்த தினத்தைக் கூறு- என்று தடியை எடுத்தார். அதனைத்தான் சேர் கூறுகின்றேன் என்ருன் அவன். ஆசிரியர் அது எப்படியென்று அதட்டினர். அவன் அமைதியாகச் சொன்னுன் — ஒன்பதாம் தேதி- ஆறும் மாதம்- ஐம்பத்தி நாலாம் ஆண்டு. ஆசிரியரின்



மாணவன்: எனக்கு அரை நாள் லீவு தரவேண்டும் சார்!

ஆசிரியர்: ஏன்டா?

மாணவன்: அப்பா ஆஸ்பத்திரியிலே; அம்மாவைப் படத்துக்குக் கூட்டிக் கொண்டுபோக ஆளில்லை நான் தான்... ...

ஆசிரியர்: ......?

—ஜோக்கிரடீஸ்

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணம் கொடுத்து வாங்கலாம்! நேரத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா? நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே,

# மில்க்வைற் சலவைப் பவுடர்




துரிதமாகவும், தூய்மையாகவும் சலவை செய்வதற்கு, மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவிக்கப் பழகுங்கள்

ஒரு பைக்கற் மில்க்வைற் சலவைப் பவுடரின் விலை 35 சதங்கள் மட்டுமே! பாவித்த 20 வெற்றுறைகளைச் சேகரித்து திறப்புக் கோவையொன்றைப் பெறுங்கள்.

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்.

ஒரு கோழிமுட்டை வியாபாரியின் அலறல்:-

*புத்தப் புதுக் கோழி முட்டைங்க! கோழி முட்டையோன்னு சந்தேகப்பட்டா, ஒடச்சிப் பாருங்க கோழிக் குஞ்சு இருக்கும்!'*

—எம். யூ. ஹாறூன், அக்கரைப்பற்று -2

கோபம் இருந்த இடம் தெரியாமல் பறந்து விட்டது. ராமனைப் பார்த்து ராமா! நீ தான் உண்மையில் புத்திசாலி என்றார்.

நாமனைவரும் சிரித்து விட்டோம்; ஆசிரியர் முகத்திலும் புன்னகை தவழ்ந்தது.

—வீ.ரி. செல்லையா

□

அன்று தமிழ்ப் பாட நேரம். தமிழாசிரியர் தமிழ் இலக்கணத்தைப்பற்றி விவரமாகக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

மாணவர்களே! நாம் எல்லோரும் இலக்கணம் வழுவாத சுத்தத் தமிழில் எழுதப் பழக வேண்டும். உதாரணமாக 'ப்' என்ற மெய் எழுத்தும் 'அ' என்ற உயிரெழுத்தும் சேர்ந்து 'ப' என்ற உயிர் மெய் எழுத்தாகின்றது. மேலும் நாம் நடைமுறையில் கொச்சைத் தமிழில் பேசுகிறோம். இதை மாற்றி நம்மால் இயன்றளவு இலக்கணம் வழுவாத நல்ல தமிழில் பேசப் பழக வேண்டுமென்று கூறினார்.

ஒரு மாணவனை நோக்கி - சுகுமார்! காலம் மாறிப் போச்சு என்ற வாக்கியத்தை இலக்கணம் வழுவாத தமிழில் எழுது பார்க்கலாம் என்றார்.

சுகுமாரும் உற்சாகத்தோடு கரும்பலகையில் எழுதிக் காட்டினன். அதைப் பார்த்த தமிழாசிரியருக்கு மயக்கமே வந்து விட்டது; எமக்கோ சிரித்ததில் வயிறு புண்ணாகிவிட்டது. கரும்பலகையில் சுகுமார் எழுதிய இலக்கணம் வழுவாத தமிழ் இது தான் —

(க் - ஆ) (ல் - அ) ம் (ம் - ஆ)
(ற் - இ) ப் (ப் - ஓ) ச் (ச் - உ)!

—சோமசுந்தரம் ராமேஸ்வரன்

# இதயம் நீ கமலம்

ச. கீதபொன்கலன்

எதிரே வரும் பெண் யார்? அவள்தான் கமலம். வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டியதை எல்லாம் இந்தச் சிறு வயதிலேயே அனுபவித்து அலங்காரச் சிற்பமாக இருக்கவேண்டியவள்...... அலங்கோலச் சின்னமாக அவதாரம் எடுத்திருக்கும் அவல நிலையைப் பாருங்கள். ஏன் இந்த நிலை? கையிலே குழந்தை. கண்களிலிருந்து ஆறுகப் பெருகும் கண்ணீர். ஏன் இந்தத் துயரம்... பூசையிலே இருக்கவேண்டிய மலர் புழுதியிலே எறியப்பட்டது யாரால்? இதை எடுத்துக் கூறுவதால் அவளின் வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் உண்டாகுமா? உண்டு என்றுல்!! அவளே கூறுகின்றுள் கேளுங்கள்.

'கமலம்'

என் பெயருக்கேற்றபடி வாழ முடியவில்லையென்றுல்...! தாமரைக்குத் தடாகத்தில் இருக்கும் வரை தான் மதிப்பும் அழகும். தரையில் வீசிவிட்டால்......... இதே நிலைதான் இன்று என் நிலையும். திருநெல்வேலி என்னும் கிராமந்தான் எனது ஊர். நான் பிறந்தபோதே வேண்டாத ஒரு பொருளாக வரவேற்றுள் என் அன்னை. காரணம்... விசயம் முடிந்துவிட்டது என்று விட்டுப் பிரிந்த தந்தை. அவர் யாரென்றே இன்னும் எனக்குத் தெரியாது. பிறந்துவிட்ட என்னை பின் வெறுக்கவில்லை என் அன்னை. என் மழலை மொழி அவளிற்கு ஓர் ஆறுதலாக, அலையும் மனதிற்கு ஓர் அரவணைப்பாக என்னை வளர்த்தாள். வளர்பதற்கோ அவள் பட்ட பாடு அப்பப்பா...வட்டமிடும் கழுகுகளிற்குத் தப்பி, வலை வீசும் வாலிபர்க்கு வாய் வீசி ஒருமுறைவிட்ட தவறை மறுமுறையும் செய்வதற்குத் தயாராகவில்லை அவள். எதிர் வீட்டில் குடியிருக்கும் வாத்தியார் ஏகாம்பரம், மனைவி சிவகாமி, ஒரே மகன் சேகர்- அவர்கள் வீட்டிற்தான் அம்மா வேலை செய்து வந்தாள். வாத்தியாரம்மா மிகவும் நல்லவ. அவதான் அம்மாவிற்கு அடிக்கடி ஆறுதல் கூறுவா. நானும் அவர்கள் வீட்டிற்குள் சொந்தப் பிள்ளையைப்போல் வளைய வளைய வருவேன். சேகர் அண்ணு கூறுவார், 'கமலம், நீ பள்ளிக்கூடம் போகாவிட்டாலும் நான் படிக்கும் நேரத்திலாவது வந்து படிக்கவேண்டும். கொஞ்சமாவது படிச்சிருந்தால் உனக்குத்தான் நல்லது' என்று சொல்லுவார். நானும் அவர் படிக்கும் நேரத்தில் பக்கத்திலிருந்து படிப்பேன். சேகர் அண்ணு நன்றுகப் படிப்பார். வகுப்பில் அவர்தான் முதலாவதாக வருவார். அவரின் ஊக்கத்தினுல் சிறிது நாட்களுக்குள் நானும் ஓரளவிற்குப் படிக்க முடிந்தது. இடையில்...

சில வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. எனக்குப் பதின்மூன்று வயது ஆரம்பமாகியது. திடீரென்று ஒரு நாள் மூலையில் பிடித்து அமர்த்தப்பட்டேன். அதனுல் என் படிப்பும் தடைப்பட்டுவிட்டது. சேகர் அண்ணுவின் அறைக்குள் போவதற்கே மிகவும் வெட்கமாக இருந்தது. வெட்கப்பட்டால் படிக்க முடியுமா? ஒருநாள் சேகர் அண்ணு வேலை விடயமாகக் கொழும்பிற்குச் சென்றவர் திரும்ப வரவில்லை. கடிதந்தான் வந்தது.

தனக்கு நல்ல வேலையொன்று கிடைத்திருப்பதாகவும் வருட முடிவிற்தான் ஊரிற்குத் திரும்ப வரலாம் என்றும், உடன் வேலையில் சேரவேண்டிய இக்கட்டையும் விபரித்து எழுதியிருப்பதாக வாத்தியாரம்மா கூறிஞ. அம்மாவிற்கு ஏற்பட்ட சுகயீனத்தால் அம்மாவின் வேலைகளை நான்தான் செய்துவந்தேன். சேகர் அண்ணுவிடமிருந்து அடிக்கடி கடிதங்கள் வரும். ஒருநாள் காகிதக்காரன் தந்த கடிதத்தை வாத்தியாரம்மாவிடம் கொடுத்தேன். அது சேகர் அண்ணுதான் எழுதியது. விரைவில் லீவில் வருவதாகவும் கூடவே அவருடன் வேலை செய்யும் நண்பனும் வருவதனுல் அவன் தங்குவதற்கு முன் போட்டிக்கோவைத் துப்பரவு செய்து வைக்கும்படியும் எழுதியிருந்தார். வாத்தியாரம்மா அதற்காக வேண்டியதையெல்லாம் என்னிடம் சொல்லி கொழும்பில் இருப்பவர்கள் அங்கு இருக்கும் வசதி போல இங்கும் குறையில்லாமல் இருக்கவேண்டும். என்னுல் ஓடி

ஆடி வேலை செய்ய முடியாது. இதுகளையெல்லாம் நீதான் செய்யவேண்டும். சேகரிற்குத் தங்கை இல்லாத குறையை நீதான் தீர்க்கவேண்டும், என்று பொறுப்பு பூராவையும் என் தலையில் விட்டுவிட்டா.

அன்று அரைப் போயா. அதிகாலையில் வாத்தியாரம்மா வீட்டிற்குச் சென்றேன். 'கமலம், சேகரும் அந்தக் கொழும்புப் பொடியனும் நேத்து ராத்திரியே வந்திட்டாங்கள். நல்லா நித்திரை கொள்ளுதுகள். நீ போய் அதுகள் குளிக்கிறதிற்குச் சுடுதண்ணி வை. நான் போய் எழுப்பிவிட்டு வாறன்' என்று கூறிவிட்டுப் போய்விட்டா. குளிக்கும் அறைக்குள் சுடு தண்ணீரைக் கலந்து வைத்துவிட்டு வெளியே வருவதற்கும், அவர்கள் இருவரும் குளிப்பதற்குத் தயாராக வரவும் சரியாக இருந்தது. எதிரில் சேகரண்ணுவையும் மற்றவரையும் கண்டதும் எனக்கு வெட்கமாகப் போய்விட்டது. தலையைக் குனிந்தபடி அப்பாற் செல்ல முனைந்தேன். 'என்ன கமலம்!' சேகரண்ணுதான் கூப்பிடுகின்றுர். திரும்பிப் பார்க்கின்றேன். 'ஆளே அடையாளம் தெரியாமல் வளர்ந்துவிட்டாயே! அ... இவன் யார் தெரியுமா? என்கூட வேலை செய்யும் எனது நண்பன் ரவி. யாழ்ப்பாணத்தை பார்க்க வந்திருக்கிருன்...'

அண்ணு முடிப்பதற்குள் அவர் குறுக்கிட்டார். 'சேகர்... ஆமாம் இது யாரென்று கூறவில்லையே...உன் தங்கையா?'

'ஆமாம் தங்கை மாதிரித் தான். ஆனல் கூடப் பிறவாத என் உயிர்த் தங்கை. ம்...ம் வா வா அப்புறமாகக் கதைக்கலாம்.' அண்ணு குளியலறைக்குள் போய் விட்டார். ரவி திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றுவிட்டார். அன்று சேகரண்ணு மானிப்பாயில் இருக்கும் அவரது சிறிய தகப்பஞர் வீட்டிற்குச் சென்றுவிட்டார். ரவி போகவில்லை· வாத்தியார் யாழ்ப்பாணம் போய்விட்டார். 'மிள்ளை கமலம், நான் கோயிலுக்குப் போயிட்டு வாறன். வேலையளைச் செய் அதுக்கிடையில நான் வந்திடுவேன்' என்று வாத்தியாரம்மா கூறிக்கொண்டே கோயிலுக்குப் போய்விட்டா. நான் காலைச் சாப்பாட்டைத் தயார்செய்துவிட்டு, வீட்டிற்குப் போய் அம்மாவிற்கு மருந்து கொடுத்துவிட்டு வரலாம் என்று தெருவிற்கு வந்துவிட்டேன். காயிதக்காரன் ரவியின் பெயருக்கு ஒரு கடிதத்தைத் தந்துவிட்டுப் போய்விட்டான்.

கடிதத்தை எப்படி ரவியிடம் கொடுப்பது என்று நினைத்த வண்ணம் உள்ளே திரும்பும்போது, ரவி எதிரே வந்து 'என்ன கமலம் யாருக்குக் கடிதம் வந்திருக்கின்றது... என் பெயருக்கா?' என்ருர். நான் கடிதத்தை அவரிடம் கொடுத்துவிட்டுப் பேசாமல் நின்றேன்.

'கமலம், எனக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும் குடிப்பதற்கு'

நான் உடனே உள்ளே ஓடிவிட்டேன். தண்ணீரைக் கொண்டு அவரின் அறையை அடைந்தபோது அவர் வாசல் வரை வந்துவிட்டார். தண்ணீர் கிளாசை அவரிற்கு நீட்டினேன். தண்ணீர் கிளாசுடன் என் கையையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார். சீ கையை விடுங்கோ, என்ன வேலையிது... அம்மா வரப்போகிரு என்றேன் நடுங்கியபடியே.

'அம்மா வரட்டும். முதலில் உனக்கு என்மேல் கோபமா, இல்லையா? அதைச் சொல்' என்ருர்.


என்னல் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. அவரின் முகத்தைப் பார்த்தேன். அவரும் என் முகத்தைப் பார்த்தார். அந்த நேரம் ரேட்டில் ஒரு டாக்சி வந்து நிற்

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -

கும் சத்தம் கேட்டது. நான் உள்ளே ஓடிவிட்டேன். வாத்தி யாரைத் தேடி யாரோ வந்தார் கள். ரவிதான் அவர் வெளியே பேய்விட்டார் என்று கூறிவிட்டு வந்தார். இந்த நிகழ்ச்சியின் பின் ரவி என்னைத் தனிமையிலே சந் திக்க விரும்பி அண்ணாவுடன் வெளியே போவதைக் குறைத் துக்கொண்டார்.

ஒரு நாள் குளிக்கும் அறையில் நானும் ரவியும் கதைத்துக் கொண்டிருந்ததை அண்ணா பார்த்துவிட்டார். கண்டும் காணாததுபோல் சென்றுவிட் டார். இதை நான் ரவியிடம் கூறினேன்.

நீர் ஒன்றிற்கும் பயப்பட வேண்டாம். சேகர் ஒன்றும் சொல்லமாட்டான். அப்படி அவன் எங்களது தொடர்பை வெறுத்தாலும், நான் உன்னைக் கைவிடமாட்டேன். இது சத் தியம். இது விடயமாக உனது தாயாரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கூறினார். நான் வீட்டிற்குத் திரும்பிவிட்டேன். சேகரண்ணா பார்த்துவிட்டாரே என்ன சொல்லுவாரோ என்ற பயம். நேரில் அவரைக் காணவே பயமாக இருந்தது. இரண்டு மூன்று நாட்கள் அவரைக் காணா மலே ஒருவாறு கழித்துவிட்டேன். அன்று சேகரண்ணாவே எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். கமலம்...கமலம் தம்பி சேகர் வந் திருக்குது... தேத்தண்ணி போட் டுக்கொண்டு கெதியா வா. இது அம்மாவின் குரல். கதவிடுக்கால் சற்று எட்டிப் பார்த்தேன். அண்ணா அம்மாவின் பக்கத்தில மர்ந்து கதைத்துக்கொண்டிருந் தார். தனது லீவு முடிந்துவிட்ட




தாகவும், கொழும்பு போவதாக வும் கூறினார். நான் தலைகுனிந்த படியே தேனீரை அவரிடம் நீட்டினேன். தேனீரை வாங்கிய அவர் உடன் என் முகத்தை நிமிர்ந்து பார்த்தார். நான் உடனே உள்ளே திரும்பிவிட் டேன். அண்ணா கதைத்து முடிந்துவிட்டது போலும் புறப் பட ஆயத்தமானார். ‘அம்மா போயிட்டு வாறன். உடம்பைக் கவனமாப் பார்த்துக்கொள்ளுங் கோ. கமலம்... கமலம் நான் போயிட்டு வாறன்’ கூறிக் கொண்டே என் அறைக்குள் வந்துவிட்டார்.

‘கமலம் நீ எனது தங்கை மாதிரி சொல்கிறேன் என்று குறை நினைக்கக் கூடாது... ரவி கொழும்பில் இருப்பவன். அவ் வளவு நல்ல குணம் படைத்தவ னல்ல. நீ பெண் லேசில் நம்பி விடுவாய். பிறகு ஏதாவது நடந் துவிட்டால், சேகர் அண்ணாவின் சினேகிதன் தானே ரவி! ஆனால் அண்ணா கூட ரவியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று துன்பப் படுவாய்; புத்தியாய் நடந்து கொள் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். அன்று அண்ணாவின் சொற்படி கேட்டி ருந்தால், இன்று இத் துர்ப்பாக் கிய நிலை ஏற்பட்டு இருக்குமா? பெண் புத்தி பின் புத்தி என்று சொல்வது வீணாகுமா?!’ —என் னுடைய மனம் ரவியை நல்லவ ரென்று நம்பியது; ரவி நடந்து கொண்ட விதமே அப்படி!

அன்றிரவு படுக்கையிலிருந்து கொண்டே என் எதிர் காலத் தைப் பற்றி யோசித்தேன். வெளி யில் எவரோ நிற்பது போன்ற பிரமை- கதவைத் திறந்து பார்த் தேன்- எதிரே ரவி...! எனக்குக் கையும் காலும் மரத்துப் போன மாதிரி ஒருணர்ச்சி. எங்கே வந் தீர்கள், இந்த நேரத்தில்... கேட் க வேண்டிய கேள்வியைக் கேட்டு விட்டேன்.

உன் அம்மாவைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்...

இந்த நேரத்தில் அவவுடன் என்ன கதைக்கப் போகிறீர்கள்? இப்பொழுது தான் சற்றுக் கண் அயர்ந்திருக்கிறா; தயவு செய்து போய் நாளை வந்து பாருங்கள் என்றேன்.

நான் நாளைக்குக் கொழும்புக் குப் போகப்போறன். சரி; அப்ப டியானால் உம்முடனாவது கொஞ் சம் கதைப்பம்... அல்லாட்டில் இப்படியே போகட்டா?

அவரைப் பார்க்கவே பரிதா மாகவிருந்தது. ஏன் அப்படிக் கேட்டீர்கள்; உங்களுடன் கதைக் காதனை என்ன? வாருங்கள்




பகலிரவாய்ப் பாடுபடும் பாட்டாளி,

பாங்குடனே பணம் சேர்க்கும் முதலாளி.

இவர்கள் யாவரும் விரும்பிப் புகைப்பது

காரம், மணம், குணம்

நிறைந்த

# கமலா பீடியே!

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்தியாவிலும், இலங்கையிலும் இணையற்றதெனப் புகழ் பெற்றது.

தயாரிப்பாளர்கள்:

**கமலா ஸ்டோர்ஸ்**

பொன்னம்பலம் பில்டிங்ஸ்,

176, சென்ரல் வீதி, கொழும்பு.

உள்ளே என்றேன். அவர் உள்ளே வந்ததும் அங்குமிங்கும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். இங்கே ஆசனமெதுவுமே கிடையாது கீழே தானிருக்க வேண்டு்மென்றவாறு சிரித்தேன். பரவாயில்லை என்று கூறிக் கொண்டே என் பாயிலமர்ந்தார். நான் எதிரில் எதுவுமே பேசாமல் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றேன். கமலம் இப்படி இருமன்!

நேரம் போனதே தெரியவில்லை. என்ன கதைத்தோம்; எது எப்படிக் கதைத்தோம் என்பது கூட இந்த மன நிலையில் ஞாபகத்தில் இல்லை. வாத்தியார் வீட்டுச் சுவர்க் கடிகாரங் கூட மணி பன்னிரண்டென்று எங்கள் நன்மைக்காகத் தான் சொன்னதோ...?

போகட்டுமா கமலம்!- விழுங்கி விடுபவர் போல என்னைப் பார்த்துக்கொண்டே கேட்டார். என்னால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. மௌனியாயிருந்த என் கை பற்கியிழுத்து அணைத்துக் கொண்டே, 'கமலம்! உன்னை விட்டுப் போகவே மனம் வரவில்லை. கூடிய சீக்கிரம் திரும்பி வருவேன். வந்தவுடன் என்னொடு வரத் தயாராக இருக்கவேண்டும். ஏன் பேசாமல் இருக்கிறீரென்ருர்

பேசுறதற்கு என்ன இருக்கு? உங்களைத் தான் கதியெண்டிருக்கிறன். எப்ப வந்து கூட்டிப்போவீர்களென்று ஆவலுடன் எதிர் பார்த்திருப்பேன்; ஏமாற்றி விடுவீர்களா...? என்றேன். என் நாத் தளதளத்தது.

மறப்பதா... உன்னையா? — அவரின் பிடி இறுகியது; விளக்கு அணைய இருள் கவிந்தது. எனது வாழ்வும் அவரால் இருட்டடிக்கப் படுமென்று அப்போது என்னால் நினைக்க முடியவில்லை.

மணி மூன்று. நான் தந்த விலாசத்திற்குக் கடிதமெழுது... நான் வாறன் கமலம்!- அவர் நகர்ந்தார். பொழுது புலர்ந்தது.

பதினைந்து வருடங்களாகக் கட்டிக் காத்து வந்தேனே... அது இன்று... ஐயோ... சீ கேவலம்... ஏன்தான் ரவியை வீட்டிற்குள் அழைத்தேன்...

குளித்து விட்டு அவசர அவசரமாக வாத்தியார் வீட்டிற்கு ஓடினேன். 'அவ'ரைக் காணவில்லை. அம்மா அண்ணு எங்கே?- அண்ணனைத்தானே உரிமையுடன் விசாரிக்க முடியும்! அவனும் ரவியும் காலம்பற ரயிலில போயிட்டாங்கள். பெரிய பாருங்கல்லைத் தூக்கிப்போட்டது போலிருந்தது ஆனாலும் ரவியின் வார்த்தைகள் மனதைத் தேற்றிக் கொண்டன.

அவர்கள் போய் மூன்று நாட்களாகி விட்டன. சேகரண்ணுவின் கடிதமொன்று வந்தது. ரவி அனைவர் சுகத்தையும் விசாரித்ததாக அதில் எழுதியிருந்தார். அவர் ஏன் எனக்குக் கடிதமெழுதவில்லை? இடையிடையே கடிதமெழுத நினைத்தாலும், அவரே வரட்டுமெனக் காத்திருந்தேன்.


மாதமொன்று ஓடி விட்டது. வாத்தியார் ஐயாவுக்கும் பென்சன் கொடுத்து விட்டார்கள்.

இனி இங்கிருந்தென்ன செய்வது! கொழும்பில போய்த் தம்பியோடை இருக்கலாம். அவனுக்கும் கடைச் சாப்பாடு எத்தினை நாளைக்கு... நல்ல நாளாப் பார்த்துக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லிக் கடிதமெழுதுங்

ஒருவர்: ஆங்கிலப் பத்திரிகைச் செய்தி பார்த்தீங்களா...? நிர்வாண நாடகங்களை மேடையேற்றப்போகிறார்களாம்.

மற்றவர்: உடையில் தானே ஹீரோ- ஹீரோயினினை அறிந்து கொள்வது. உது கஷ்டமாக இருக்கப் போகுதே!

—தியாகு.



கோவன். கமலத்தையும் கூட்டிக் கொண்டு போகலாம். ஆனால் அவளின்ரை தாய்க்குச் சுகமில்லாமல் இருக்கையுக்கை அதுவும் சரியில்லைத்தான். வசதிப்பட்டால் பிறகு கூப்பிடலாம்— இது வாத்தியார் மனைவி. பதினைந்து நாட்களின் பின், வாத்தியார் ஐயாவையும் அம்மாவையும் அழைத்துப் போக அண்ணா வந்திருந்தார். அவரைப் பற்றி அண்ணாவிடம் எப்படிப் பேச்சுக் கொடுப்பேன். போகும் போது வாத்தியாரம்மா, எனது அன்னையிடம் ரூ500/- கொடுத்து கமலத்துக்கு ஏதாவது நகைநட்டு செய்துபோடு. அடிக்கடி கடிதம் எழுது என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள்.

எதையோ பறி கொடுத்த நிலையில் அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றோம். ஆதரவற்ற நிலையிலேயே இரண்டு மாதங்கள் கழிந்தன. படுக்கையிலிருந்து எழுவதே கஷ்டமாகவிருந்தது. லேசான தலைவலி- சத்தியெடுக்க வேண்டும் போலிருந்தது பின் பக்கம் சென்றேன். அவ்வளவுதான்... ஹபக்!... அம்மாவுக்குக் கேட்டிருக்க வேண்டும்! ஏன்? என்னடி செய்யிறாய்...? நான் அம்மாவின் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினேன். என்ன நடந்ததென்று சொல்லடி!- அம்மாவின் குரலிலே பதட்டம். எப்படிச் சொல்வது? சொன்னாலும் அவள் இதைத் தாங்குவாளா? சொல்லாமலிருந்தாலும் தெரியாமல் விடப்போகிறதா? ஒருவாறு உண்மையைச்சொல்லிவிட்டேன்

அம்மா! உனக்குப் பழியை வாங்கித்தர நான் விரும்பவில்லை. என்னை மன்னித்து விடம்மா...! - என்று கதறத்தான் முடிந்தது, என்னால்.

அம்மாவிற்கு என்னால் வீண் பாரமும் ஊராரின் பழியும் தான் பெற்றதற்காகக் கிடைக்கும் பரிசு என்றால்... இனி உயிர் வாழக் கூடாதென்பதே என் மனமறிந்த முடிவு. பெற்றவள் மனமோ...?

உனக்காகத்தான் நான் வாழ்ந்தேன். நீ இல்லாவிட்டால் என் கதை எப்பவோ முடிந்திருக்கும். எதற்கும் ரவிக்கொரு கடிதம் போடு! என்றா அம்மா. நானும் பிரத்தியேகமாக ஒன்றும் எழுதாமல் சுகம் விசாரித்துக் கடிதமெழுதினேன். இரண்டு மாதம் கடந்தும் எது வித பதிலுமில்லை. இப்பொழுது எனக்கு நாலாவது மாதம். மீண்டுமொரு கடிதமெழுதினேன். நாட்கள் கடந்தனவேயன்றிக் கடிதமெதுவும் வரவில்லை

இடையிடையே வாத்தியார் குடும்பத்திற்குப் போட்ட கடிதங்கட்கு மட்டும் பதில் கிடைத்தது. அதுவரை அவர்களோ நாமோ ரவியைப்பற்றி ஒரு வரிகூட எழுதியதில்லை. துன்பத்திற்குத் துணிவதிகமென்பார்கள். சேகரண்ணாவிற்கு ரவி பற்றியெழுதிய கடிதத்திற்குப் பதிலும் வந்தது.

கமலம்! ரவியைப்பற்றி ஏன் விசாரிக்கிறாய்? அவனிடம் நீ கதைத்த சம்பவம் பூராவையும் மறந்து விடு. நாங்கள் உனக்கு நல்ல இடத்தில் பொருத்தமான மாப்பிள்ளை பார்த்து இருக்கின்றோம். கல்யாணமென்பது ஆயிரங்காலத்துப் பயிர். எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். விரைவில் அம்மா இவ் விடயமாக உன் அம்மாவைச் சந்திக்க வருவா. ரவியைப் பற்றிக் கேட்டிருந்தாய். அவன் வேலையை விட்டுப் போய் மூன்று மாதங்களாகி விட்டன. இப்பொழுது அவன் எங்கிருக்கிறானென்பது கடவுளுக்கே வெளிச்சம். அம்மாவிற்குச் சுகம் சொல்லவும். -என்று நான் வாசிப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த அம்மா ஒன்றுமே பேசவில்லை. எனக்காக அம்மாவும், அம்மாவிற்காக நானும் அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டோம். எங்கே நானேதாவது செய்துவிடுவேனோ என்ற பயம் அம்மாவிற்கு!


என் தலை விதிதான் இப்படியென்றால் உனக்கும் இந்தநிலையா வாத்தியாரம்மா வந்துகேட்டால் என்ன சொல்லுவேன்? அவர்கள் முகத்தில் எப்படி முழிக்கிறது? உன் தலைவிதி எப்படியோ அப்படியே நடக்கட்டும் என்று சொல்லிப் பாயில் முடங்கிக்கொண்டா. நானும் ஒன்றும் பேசாமல் படுத்தேன். விடிந்து வெகு நேரமாகி விட்டது. அம்மாவை எழுப்பச் சென்றேன். அங்கே—

என்னை அனாதையாய்...

ஐயோ... அம்மா...!

அம்மா உன் கடைசி யாத்திரைக்கு, வாத்தியாரம்மா எனக்கு நகை நட்டிற்கென்று சொல்லித் தந்த காசிருக்கு. எனக்கு நகையும் வேணும் நட்டும் வேணும். உன்னைச் சங்கையாக, ஊர்வலம் போக அது காணும். எல்லாம் முடிந்து விட்டது —
அம்மா போய்ப் பத்து நாட்கள். இனி நான் போகலாம்- போவதற்கு ஆயத்தமாக வேண்டாமா? அம்மா! வயிற்றிலே வலி. உள்ளிருக்கும் உயிரிற்கு நான் சாவது பிடிக்கவில்லைப் போலும்- உருண்டு பிரள்கிறது. இடது சள்ளையில் காலால் உதைந்திருக்க வேண்டும் சிறிது நோ... ஆனால் அது மனதிலேற்பட்ட இன்ப நோ! ஆம்; உனக்காகவாவது நான் உயிரோடிருக்க வேண்டும். என் தாய் எனக்காகத்தானே இத்தனை காலமுயிர் வாழ்ந்தாள். ... நான் என் குழந்தைக்காக உயிர் வாழ உறுதி கொண்டு விட்டேன்.

## மினிவர்



போலிஸ்: ஐயய்யோ! உது மிச்சாங் மிச்சங் மோசமான டிரெஸ்!

முனிவர்: இதுல ருலாமி, சீலை மிச்சம் மிச்சம் குறைவு...! இது 'மைக்கிறோ மினி' உடை.

—ஜோக்கிரடீஸ்

விடியற்சாமம் நாலு மணியிருக்கும். நல்லூர் முருகனின் கோயில்மணி கேட்டுக்கண் விழித்தேன்; எழும்ப முடியவில்லை. வயிற்றில் லேசான வலி- எதற்காக என்றும் புரியவில்லை. நேரம் செல்லச் செல்ல வலி கூடுவது போலிருந்தது. ஆமாம்; அதற்கும் பூமியைப் பார்க்க ஆசை வந்து விட்டது. இனி இங்கிருந்தால் யாரும் என்னைக் கவனிக்க மாட்டார்கள். அப்படியானால் அதுவும் நானும் சாகவேண்டியது தான். தட்டுத் தடுமாறி எழுந்து வாசற் கதவைப் பூட்டி றோட்டில் இறங்கினேன். நல்லூர் மணி ஐந்து அடித்து ஓய்ந்தது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை நோக்கி நடையைக் கட்டினேன். வலி காரணமாக நடையில் தளர்ச்சி! ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ள றெயில்வே கேட் பூட்டப்பட்டிருந்தது. நிற்கவே முடியாமல் அருகிலிருந்த சுவரைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டேன். மூச்சு விடுவதே பெருங்கஸ்டமாகவிருந்தது. றெயிலும் வந்த பாடில்லை. என் பக்கத்தில் நின்ற காரிலிருந்து ஒரு பெரியவரிறங்கினார். என்னருகில் வந்த அவர், 'அம்மா! ஏனிந்த நிலை? நீ எங்கே போக வேணும்' என்று கேட்டார். அந்த முருகனே வந்து கேட்டது போலிருந்தது. என் நிலைமையைக்கூறினேன். கேட் திறபட்டது, எல்லோரும் போய் விட்டார்கள். வாம்மா, நானுன்னைக் காரில் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் விடுகிறேன் என்று என் கைகளைப் பிடித்து எழுப்பினார். அவருக்கும் எனக்குமிடையே ஒரு வித பாசம் — பிணைப்பு! அவரின் சொல்லைத் தட்ட முடியாமல் காரில் ஏறினேன். ஆஸ்பத்திரியை அடைந்ததும், முன்னாலிருந்த கடையில் கோப்பி வாங்கித் தந்ததுடன், கையில் ஓர் ஐந்து ரூபா நோட்டையும் வைத்து, நீ சுகமாய்ப் பிரசவிப்பாயம்மா எனக்கூறி, ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டுச் சென்று விட்டார்.

அன்று மாலையே எனக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்து விட்டது.

ஆண் குழந்தை...!

பட்ட துன்பத்தையெல்லாம் மறந்து வாய் விட்டுச் சிரித்தேன்.

பெண்ணாகப் பிறந்திருந்தால் என் தாய் பட்ட துயரம்— நான் படும் வேதனை ... அதற்கும் ஏற்படுமே, என்று என் கையாலேயே நெரித்துக் கொன்றிருப்பேன்.

என்னுடனேயே என் துன்பம் முடிவடைந்தது என்ற ஆறுதல்— லேசாகக் கண்ணயர்ந்தேன்.

மூன்றாம் நாள் குழந்தையின் தகப்பன் பெயரைக் கேட்டார்கள். ரவி என்றேன். குழந்தைக்கு என்ன பெயர் வைக்க உத்தேசம் என்றார்கள். அதற்கும் ரவி என்றேன். இதுக்கு விஷர் என்று அப் பெண் கூறிக் கொண்டு போவது எனக்கும் கேட்டது. ... எனக்கா விஷர்...?

வரும் பொழுது மடியில் தாங்கி வந்ததை இப்பொழுது கையில் தாங்கிய வண்ணம் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினேன். கடுமையான வெயில்; தலை சுற்றியது; நடக்கவே முடியவில்லை. அருகில் இருந்த மரத் தண்டை ஓடினேன். சுரீரென்ற வெயில்! நிமிர்ந்து நோக்கினேன் தறிப்பதற்காக கிளைகளையெல்லாம் வெட்டி, மொட்டையாக்கி விட்டிருந்தனர். எனக்கும், அந்த மரத்துக்கும் தான் எத்தனை ஒற்றுமை...'

சிரித்தேன்; என்னையறியாமலே சிரிப்பு வந்தது.

அழுதேன், என்னையறியாமலே!

என் குழந்தையை இறுக அணைத்துப் பிடித்த வண்ணம் வாழ்க்கையின் ஆரம்பத்திற்குத் திரும்பி ஓடினேன்!

விதி என்னைப் பார்த்துச் சிரித்தது.

# ஆச்சி பயணம் போகிருள்

செங்கை ஆழியான்

—[14]——————

பேராதனைச் சந்தி ஸ்ரேசனைப் புகையிரதம் அடையும்போது நேரம் காலை எட்டரை.

'ஆச்சி, அடுத்த ஸ்ரேசனிலை நாங்க இறங்குவோம்...'

'இதென்ன ஸ்டேசன்...?'

'பேராதனை, மாமி?'

'இது பெரியதொரு புகையிரதச் சந்தி, ஆச்சி. இங்கிருந்து மாத்தளைக்கும், நுவரெலியா, அப்புத்தளை, பதுளை என்பவற்றுக்கும் புகையிரதப்பாதை போகுது...'

'பேராதனையில்தானே நாங்க இறங்கவேண்டும்...?' என்ருள், ஆச்சி.

'இங்கையும் இறங்கலாம் மாமி! அடுத்த ஸ்ரேசனில் இறங்கினுல் யூனிவேசிற்றி கிட்ட...'

றெயில் புறப்படச் சற்று நேரம் எடுத்தது.

'வடே... வடே...!'

'பார்லி... பார்லி...'

'பத்திரே... பத்திரே...'

வெளியே வியாபாரக் கூச்சல்.

'முதலிலை எங்கை போறது?'

'செல்வி இருக்கிற வீட்டுக்குப் போவம்...'

'பிள்ளைக்கு எப்ப விடுதி தருவினம்?' என்ருள் ஆச்சி.

'இரண்டாம் வருஷத்து ஆக்களுக்கு 'ஹோல்' தருகிறதில்லை மாமி! யூனிவேசிற்றியிலை படிக்க பிள்ளையள் கூடிவிட்டதாலை, முதல் வருஷத்துப் பிள்ளையளுக்கும் கடைசி வருஷத்துப் பிள்ளையளுக்கும்தான் 'ஹோல்' தருவினம்... எனக்கு வாற வருஷம் கிடைக்கும்'

றெயில் புறப்பட்டது. ஒரு பாலத்தின் மீது விரைந்து கடந்தது.

இதுதான் மகாவலி கங்கை ஆச்சி! பெரிய நதி... உதுக்குக் குறுக்கேதான் பாலம் போட்டிருக்கினம்'

றெயில் நின்றது.

'இறங்கு, ஆச்சி!...'

'இந்த ஸ்டேசனுக்கு என்ன பெயர் பிள்ளை?'

'சரசவி உயன, மாமி?'

'சரஸ்வதியோ?... நல்ல தமிழ்ப் பேரா இருக்கு!'

'சரசவி உயன, ஆச்சி! சரசவி என்ருல் பல்கலைக்கழகம்... உயன என்ருல் பூங்காவனம்... முந்தி நாங்க படிக்கிற காலத்திலை இதுக்கு 'நியூ பெரதேனியா' என்று பெயர்... இப்பதான் மாத்தினவை...'


'பேர் மாத்திறத்திலை எங்கடை ஆக்கள் வலு கெட்டிக்காரர். பேரை மாத்தி என்ன பிரயோசனம். ஆக்களையும் நிலைமைகளையும் எல்லோ மாத்த வேணும்...'

நல்ல வேளையாகச் சரசவி உயன் ஸ்ரேசனில் அன்று ஒரு வாடகைக் கார் நின்றது.

மூவரும் காரில் ஏறிக்கொண்டனர். ஏறுமுதலே போகும் இடத்தைக் கூறி, எவ்வளவு கூலி வேணும் என்று பேசிக்கொண்டே சிவராசா ஏறிஞன்.

'ரஜவத்தைக்கா... இருக்கிறதைக் கொடுங்கோ' என்ருன் டிரைவர்.

'இருக்கிறதைத் தந்திட்டு நாங்க என்ன செய்கிறது... மூன்று ரூபா தாறன்...'



[சரசவி உயன்ன]

காரில் இருக்கும்போது ஆச்சி கேட்டாள்.

# மாத்திரைக் கதை

## சத்தம்

கடற்கரை மணலில் உட்கார்ந்திருந்த ஆண்டி தனது சங்கை எடுத்து ஊதி ஆரவாரம் செய்து கொண்டிருந்தான்.

கடற்கரை நீரில் மேய வந்த ஒரு முத்துச் சங்கு மற்றொரு முத்துச் சங்கைப் பார்த்து, 'அண்ணே நாம் ஒரு நாளும் இப்படிச் சத்தம் போட்டதில்லையே... இவன் கையிலிருக்கிற சங்கு மட்டும் ஏன் இவ்வளவு சத்தம் போடுகிறது...? இது வேடிக்கையாக இல்லையா?' என்று கேட்டது.

அதற்கு மற்றச் சங்கு, 'தம்பி... நம்மிடம் உயிரிருக்கிறது... முத்து மணி இருக்கிறது... நாம் பேசாமல் இருக்கிறோம். ஆனல் ஆண்டியின் கையிலுள்ள சங்கு அப்படியா? அந்தச் சங்கின் உள்ளே உயிரும் இல்லை... பொருளும் இல்லை... ஒன்றும் இல்லை... இது தானடா தம்பி அதன் அட்டகாசத்துக்கெல்லாம் காரணம்!' என்று பதிலிறுத்தது.

அண்ணன் சங்கு கூறிய பொருளைப் புரிந்து கொண்டு தம்பிச் சங்கு தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டது:-

'செத்த சங்கு சத்தம் போடும்!'

—காசி ஆனந்தன்.

'ஏதோ வத்தை என்று சொன்னய், ராசா! முந்தி வேலணைக்குப் போறதுபோல வத்தையிலும் போகவேணுமே.'

'ரஜவத்தை மாமி. நான் இருக்கிற இடத்திற்குப் பெயர் மாமி!'

'உதென்ன, பெரிய பெரிய கட்டிடமெல்லாம்... உதுதானே யூனிவேசிற்றி...'

'இது சயன்ஸ் புளொக்... உது அருணசலம் ஹோல்... இது ஜெயத்திலகா ஹோல்... இது விஜயவர்த்தன ஹோல். எல்லாத்தையும் ஆறுதலாகப் பாப்பம் மாமி!'

'எவ்வளவு பெரிய கட்டிடம் இதையெல்லாம் இந்தக் காட்டுக்கை ஏன் கட்டினவை...?'

'காடோ...?' கலகலவெனச் சிரித்தான் சிவராசா. 'வந்த வழியிலை நினைச்சு இதை, காடு என்று நினைச்சுட்டியளணை'

'றெயிலிலை வரேக்கை பாத்தனே? கொட்டிலும் குடிசையுமாத்தானே இருக்கு...'

'உதிலை... உந்தப் போஸ்ட் பொக்சுக்குப் பக்கத்திலை நிற்பாட்டுங்கோ...'

கார் நின்றது.

மூவரும் இறங்கினர்.

ஆச்சி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

'எது பிள்ளை வீடு?'

'உந்தப் படிகளாலை ஏறி மேலை போகவேணும், மாமி!...'

'உதென்ன ஊரோ!' என்று முணுமுணுத்தாள், ஆச்சி.

—[15]——————

அது ஒரு சிங்கள வீடு. அந்த வீடு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தது. பல்கலைக்கழகத்தில் வேலை செய்பவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் ஒன்று.

இரண்டு அறைகள்; ஒரு குசினி; ஒரு சிறு ஹோல்; ஒரு விருந்தை. அங்கு வாழ்பவர்கள் எழுவர். நால்வர் அவ் வீட்டிற்கு உரிமையானவர்கள். மூவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவிகள்.

ஒருத்தி செல்வி.

'இந்தச் சிறிய அறைக்குள்ளை மூன்று பேர் இருக்கிறியளே பிள்ளை!' என்று வியப்பைக் காட்டினுள், ஆச்சி.

'என்ன செய்கிறது மாமி! பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி வசதி போதாது போன போது, வெளியே வீடுகளில் இருப்பவர்களுக்குப் பெரும் அதிர்ஷ்டம் அடித்தது. குசினிக்குள்ளை இருந்துகொண்டு வீடு முழுவதையும் மாணவர்களால் நிரப்பியுள்ளனர்! மாணவர்களுக்கும் என்ன செய்கிறது? எங்காவது இருந்தாகவேண்டுமே? சாப்பாடு எல்லாம் கொடுத்து மாதத்திற்கு நானூறு ரூபாவும் உழைப்பவர்கள் இருக்கிருர்கள். இப் பல்கலைக்கழகத்தில் வேலை செய்பவர்கள்- பெரிய லெக்சரர் மாரும்தாம்-ஹோட்டல்தானே

நடத்துகினம்! நல்ல உழைப்பு..! மாணவர்களுக்குத்தான் கஷ்டம்'

'இந்த ஒரு 'பக்கீசுப்பெட்டி மேசை' மூண்டு பேருக்குக் காணுமே'

'கஷ்டம்தான் மாமி! சமாளிக்கிறோம். கட்டிலில் இருந்து கொண்டு படிப்பம்...'



'கட்டிலில் இருந்துகொண்டு படித்தால் நித்திரைதான் வரும். இப்படி ஒரு மேசையைப் போடலாமே?'

'இந்த அறைக்கே கட்டில் மூன்று போடவே இடம் சரி, மேசை எங்கை போடுகிறது? சில வீடுகளில் சாக்குக் கட்டிலும் போட்டிருக்கினம், மாமி!

'சரியான சூடு...'

'சில சிறிய அறையளுக்கை நாலு பேரும் இருக்கினம்...'

'மூச்சு முட்டிச் சாகவெல்லோ போகுதுகள்...இப்படிச் சீரழிந்த படிப்புப் படிக்கவேணுமே? இடம் காணுட்டி ஏன் இப்படிப் பிள்ளையளைப் படிக்க எடுக்கிறவன்கள். அளவா எடுத்துத் தொலைக்கலாமே? இல்லாட்டி இப்படிப் பள்ளிக்கூடத்தை வேறை வேறை இடத்திலும் கட்டுகிறது...தமிழ்ப் பிள்ளையள் படிச்சுப்போட்டு வேலையில்லாமல்தானே இருக்குதுகள். நாலாயிரம் ஐயாயிரம் என்று செலவழிச்சுப் பலன் என்ன? இந்த யாழ்ப்பாணத்துச் சாதி எளிய சாதி... காணியை விற்ருே, பூமியை விற்ருே, பட்டினி கிடந்தோ பிள்ளையளைப் படிக்க வைக்கிருன்கள்...படிப்பு முடிஞ்சதும் வேலை கிடைச்சால் தானே... இஞ்சை கொண்டுவந்து செலவழிக்கிற காசை, யாழ்ப்பாணத்திலும் இப்படி ஒரு கல்லூரி இருந்தால் மிச்சந்தானே?'

செல்வி குறுக்கிட்டாள்.

'இங்கை படிக்கிற தமிழ்ப் பிள்ளைகளையெல்லாம் கொழும்புக்குக் கொண்டுபோகப் பாக்கினம்'

'ஏன், அங்கை நரர் காணுதாமோ?'

'இல்லை ஆச்சி! இஞ்சை படிப்பிக்கிறவற்றை வீடுகளெல்லாம் அங்கைதான் இருக்கு... சுகம் தானே?'

'படிக்கிற பிள்ளையளின்ரை வீடுகளெல்லாம் யாழ்ப்பாணத்திலெல்லோ இருக்கு...'

'உதை ஆரும் யோசித்தால் இப்படியே இருப்பம்...'

அறையைத் திறந்துகொண்டு ஒரு சிறுமி உள்ளே வந்தாள். வந்தவள் இருவரையும் மிரள மிரளப் பார்த்தாள்.

'உதார் பிள்ளை?'

'இந்த வீட்டுக்காறற்றை மகள்! நல்ல குழந்தை'

'இஞ்சை வா மோனை!' என்று ஆச்சி கூப்பிட்டாள்.

'அதுக்குத் தமிழ் விளங்காது. மாமி! ரேணுகா எண்டகோ...' என அழைத்தாள் செல்வி.

ரேணுகா 'குடு குடு' வென ஓடிச் செல்வியின் மடியில் அமர்ந்தாள். அமர்ந்த ரேணு ஏதேதோ



சிங்களத்தில் செல்வியிடம் கூறினள்.

'என்னவாம்...'

'இனிமேல் விடுதலைக்கு இங்கை இருந்து போகவேண்டாமாம். தன்னோடு இருக்கட்டாம். விடுதலைக்குத் தான் எங்கையோ எல்லாம் போனவவாம்...'

ஆச்சியின் கண்கள் அறையிலிருந்த மேசையில் நிலைத்தன.

'இந்தமேசை என்ன விலையிருக்கும் பிள்ளை?'

'மலிவு மாமி! ஐஞ்சு ரூபா இருக்கும்...'

'பக்கீசுப்பெட்டி மேசை என்ருலும் கனமா இருக்கு... யாழ்ப்பாணத்தான் உப்பிடி மலிவிலை மேசை செய்ய மாட்டான். வாங்கினல் திறம்தான் வாங்குவான். இல்லாட்டில் சும்மா கிடப்பான். இப்படி பக்கீசுப்பெட்டி மேசைகளை வாங்கிப்போட்டால் படிக்க பிள்ளையளுக்கு நல்லது... எங்கை ராசாவை இன்னும் காணேல்லை... கெதியாய் வாறன் என்று போனன்...'

'வருவார் மாமி! போனவர் சினேகிதர்மாரைச் சந்தித்து விட்டுத்தானே வருவார்...'

வெளியே சப்பாத்துச் சத்தம் எழுந்தது.

'அவர் வந்திட்டார் மாமி!'

இப்ப எங்கை போறது...'

'பேராதனைப் பூந்தோட் -டத்திற்கு மாமி...!'

—[16]——————

வானளாவி பல்வகை மரங்கள் வளர்ந்து, நிழல் பரப்பி இருந்தன. மூவரும் பேராதனைப் பூந்தோட்டத்தின் பாதையொன்றில் மெல்ல நடந்தார்கள்.

'அப்பாடா... எவ்வளவு பெரிய மரங்கள்... என்னமாதிரி வளர்ந்திருக்கிறது...' என்று வியந்தாள் ஆச்சி.

'உங்களைப்போல...' என்று கிசு கிசுத்தாள் சிவராசாவிடம் செல்வி.

''இது ஆச்சி 'பொற்றனிக்கல் காடின்... எல்லாவிதமான மரங்களும் இங்கை நிக்குது...''

'இதாலை என்ன புண்ணியம்?'

'தாவரவியல் படிப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் ஆச்சி... பார்வையாளருக்கும் நல்லதுதானே...'

'எங்களைப் போல ஆக்களுக்கும் உதவும்' என முணுமுணுத்தாள், செல்வி.

'என்ன பிள்ளை...?'

'ஒன்றுமில்லை, மாமி! அங்கை பாருங்கோ... நந்தவனப் பக்கத்தை... என்னமாதிரி வெட்டிவிட்டிருக்கிறார்கள்...'

பேராதனைப் பூந்தோட்டம் பரந்ததோர் பரப்பில் அமைந்திருக்கின்றது; பெரிதும் பாரிய மரங்கள் நிறைந்த எழிற் சோலை அது. உலகின் அழகெல்லாவற்றையும் பேராதனைப் பூந்தோட்டத்தின் சிறிய ஒரு பரப்பில் திரட்டித் தந்திருக்கிறார்கள். விதம்விதமான மரங்களும், செடி கொடிகளும் பல்வேறு வர்ண ஜாலங்களில் சிந்தையை அள்ளி நிற்கின்றன.

'நல்லா இருக்கு...' என்றாள் ஆச்சி. 'இந்தப் புல்லைத்தான் எப்படி வெட்டியிருக்கிறார்கள்...'

'இந்தப் பூந்தோட்டத்தை நல்லாச் சுற்றிப் பார்க்கிறதென்றால் ஒரு நாள் வேணும், மாமி! இதைச்சுற்றி மகாவலி கங்கை முழங்கை வளைவாக ஓடுகிறது... அந்த முழங்கை வளைவினுள்தான் இத்தோட்டம் அமைக்கப்பட்டிருக்குது...'

செல்விக்கும் புவியியல் விளங்குது என்று கேலி செய்தான் சிவராசா.

'இஞ்சை பார் பிள்ளை, இந்த மரத்தை நீத்துப்பெட்டி போல வெட்டிவிட்டிருக்கிறாங்கள்...'

'உந்த மரங்கள் இப்படித்தான் வளரும் ஆச்சி!'




சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமாவென்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண் வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல நாட்டுக்குத் தேவை. வீரர்கள் தேவை; உறுதி படைத்த உள்ளங்கள் தேவை.

— அறிஞர் அண்ணா

மூவரும் மகாவலிகங்கைக் கரையோரமாக நடக்கத் தொடங்கினர். சிவராசாவிற்குப் பழைய நினைவுகள் மனதில் தோன்றின. செல்வியைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். எத்தனை மாலைகள் இதே பாதையில் இருவரும் நடந்திருக்கிறார்கள். வாலிப உள்ளங்களின் உணர்வுப் பெருக்கைத் தனிமை வழங்க, அவன் கதை பேசுவான். அவள் 'உம்' கொட்டுவாள்.

'என்ன இரண்டு பேரும் பேசாமல் வாறியள்...'

இருவருக்கும் சுய நினைவு வந்தது. 'என்ன ஆச்சி?'

'இந்த மாடுகளின்ரை கொம்பைப் பார்... பாம்பு போல வளைந்துபோய்க்கிடக்கு... அதுகளின்ரை கொழுப்பு...'

'இதுக்குள்ளை மாடுகளும் இருக்கணை ஆச்சி! வளர்க்கினம்..'

'உது பலாமரம்... காயும் இருக்கு...'

'பழத்துக்குக் கூடாது மாமி?'

'ஏன்?'

'ஈரலிப்பான பகுதிப் பழங்கள் சுவையில்லை...

'இது என்ன பிள்ளை, சத்தம் போடுதுகள்...

'வெளவால்கள் ஆச்சி! உங்கை பாரணை... இந்த மரத்திலைதான்... கறுப்புக் கறுப்பா காய்ச்சுத் தொங்குதுகள் வெளவால்கள்...'

'இவ்வளவு தொகையாயோ? இங்கினேக்கை இருந்துதான் எங்கடை பக்கமும் வாறதுபோல... மரம் முழுவதும் வெளவால்...!'

'வெளவால் இறைச்சியைச் சாப்பிடுகிறவை, என்ன மாமி?'

'சாப்பிடுகிறவைதான். ஆனால், பாவம்... உதெல்லாம் முனிவர்கள்தானே? ஒரு சாபத்தாலைதான் இப்படித் தலைகீழா இருந்து தவம் செய்யினம்...' என்றாள் ஆச்சி.

'குடும்பமும் நடத்துகினம்' என்றான் சிவராசா.

செல்வி முறைத்துப் பார்த்தாள்.

'உதென்ன வீடடா?'

'உது சம்மர் ஹவுஸ்...'

'என்னடா?...'

'தங்கிற இடம் ஆச்சி!'

'கொஞ்சம் போய் இருப்பமே?'

'அதுக்குள்ளை ஆராவது இருப்பினம் மாமி!'

'இருந்தா என்ன...? நாங்களும் ஒரு பக்கத்தில் இருக்கிறது?'

'இல்லை, ஆச்சி...அவயளுக்கு இடைஞ்சலாக இருக்கும்?'

ஆச்சி வியப்போடு நோக்கினாள்.

'ஆராவது களவா வந்து இருப்பினமே?'

ஓமோம்...

'உங்கடை யூனிவேசிற்றிப் பிள்ளையளோ?...'

'இருக்கும்... நீ வா ஆச்சி! நாங்க ஹாங்கிங் பிறிச்சுக்குப் போவம்... தொங்கு பாலம், ஆச்சி! மகாவலிகங்கைக்குக் குறுக்கே போட்டிருக்கினம்... நடக்கேக்கை ஆடும்'

தொங்கு பாலத்தில் நடக்கும்போது அது ஆடிய ஆட்டத்தில் அவள் பயந்துபோனாள்.

'இந்தப் பலகையள், உடையாதே?'

உடைஞ்சால் கங்கைக்குதான்.

போனது போதும்... திரும்பு பிள்ளை... எனக்குப் பயமாக இருக்கு... கீழே தண்ணியைப் பார்க்கத் தலையைச் சுத்துது...'

ஆச்சி விரைவாக முன்னே பார்த்துக்கொண்டு நடந்தாள். பின்னால் சிவராசாவும் செல்வியும் வந்தனர்.

'செல்வி...' என முதுகில் இடித்தான்.

மாமியிட்டை சொல்லவே.?

சொல்லன்... பயமே?...

மாமி...

ஆச்சி திரும்பிப் பார்த்தாள்.

என்ன பிள்ளை?

செல்விக்குத் தண்ணி விடாய்க்குதாம் ஆச்சி!

இஞ்சை பார்... எங்கடை பனையள்... வரிசையாக நட்டிருக்கினம்...

நேரம் பன்னிரண்டாகிவிட்டது.

போவம் ஆச்சி! கண்டிக்குச் சாப்பிடப் போகவேணும்...

போவம்... எனக்கும் கால் உளையுது!

பூந்தோட்டத்திற்கு வெளியே வந்தபோது ஆச்சி கூறினாள்.

உது யாழ்ப்பாணத்திலை இருந்தால் நல்லா இருக்கும். எல்லா மரமும் இருக்கு என்றாய்... எங்கடை கறிமுருங்கையை இங்கினேக்கை காணன்...

—தொடரும்



அழகிய வேலைப்பாடுகளுடன் தங்க நகைகளா?
நவீன நாகரீகப் புடவைத் தினிசுகளா?
இன்றே விஜயம் செய்யுங்கள்.

## சிங்காரம்ஸ்

## டைமா நகைமாளிகை

47, செட்டியார் தெரு, கொழும்பு-11.

டெலிபோன்: 20875






சீ. செங்கோட்டையன், காஞ்சிக் கோவில் அஞ்சல், நசியனூர் வழி, கோவை மாவட்டம், தமிழகம், இந்தியா.
[ கதை கவிதை எழுதல், தபால் தலை சேகரிதல், கதைகள் படித்தல் ]

கே. பாலகிருஷ்ணன் பி. ஏ., 84 ஏ, சின்னமுத்துக் கவுண்டர் வீதி, இடையன்காட்டு வலசு (அஞ்சல்) ஈரோடு தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம்.
[ நீச்சல், புத்தகம் படித்தல், பேனா நட்பு. (வயது 21) ]

ஏ. கந்தசாமி (19), முதல் ஆண்டு இளம் கலை (பொருளாதாரம்), சக்கைய நாயக்கர் கல்லூரி, ஈரோடு-4, கோயம்புத்தூர் மாவட்டம்.
[ வானொலி கேட்டல், நீச்சல், பேனா நட்பு ]

வி. பாலுசாமி (18), ஐ.பி.ஏ தெற்கு வீதி, காஞ்சிக்கோவில், நசியனூர், ஈரோடு.
[ பேனா நட்பு, தபால் தலை சேகரித்தல் ]

கே. என். சுப்பிரமணியம், அண்ணா சோடா பாக்டரி, தெற்கு வீதி, காஞ்சிகோவில் அ. நி., நசியனூர் வழி, ஈரோடை வட்டம், தமிழகம்.
[ பேனா நட்பு, விளையாட்டு, கதை கவிதை எழுதல் ]

க. தங்கராசா (கிளி - 26), புலோலி மேற்கு, தென்னிலங்க வத்தை, பருத்தித்துறை.
[ கதைகள் படித்தல், வானொலி கேட்டல் ]

பி. ரி. நவரத்தினம் (19), புதுக்கமம், வங்காலை.
[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல் ]

ஜெயமலர் மைக்கல், (18) அம்புக்குமுவ வீதி, கம்பளை.
[ வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல் ]

எம். ஐ. எம். முசாதிக், மே/பா. அன்வர் ரேடர்ஸ், 1-ம் குறிச்சி, மக்காமடி வீதி, மருதமுலை, கல்முனை.
[ கதை கட்டுரை சேகரித்தல், வானொலி கேட்டல், பேச்சுப் போட்டியில் பங்குபற்றுதல், பத்திரிகை வாசித்தல் ] (16)

எஸ். எஸ். ஜெய்சிங் (18) 56/1, கடுகண்ணாவவீதி, கம்பளை.
[ கட்டுரை எழுதுதல். முத்திரை சேகரித்தல், பேனா நட்பு ]

எஸ். வயிரமுத்து (24), நாவற்குடா, காத்தான்குடி,
[ கதை கட்டுரை எழுதல், முத்திரை சேகரித்தல், நாடகங்களில் நடித்தல், பத்திரிகை வாசித்தல்]

அ. அரசரெத்தினம் (23) வட்டார எண் 6, சேனையூர், மூதூர்
[ கவிதை புனைதல், கரப்பந்தாட்டம், சித்திரம் வரைதல் ]

செல்வி. அ. அன்னலெட்சுமி, (வயது-19) மே/பா. அ. அரசு, 6-ம் வட்டாரம், சேனையூர் — மூதூர்.
[ கவிதை புனைதல், கட்டுரை கதை வாசித்தல், தையற் கை வேலை ]



பீ. எஸ். ஜோன் (19) மேரி வாசா, மண்டூர்.
[ வியூகார்ட் முத்திரை சேகரித்தல், கதை கட்டுரை எழுதல், பேனு நட்பு ]

என். எல். மஃறூப், பவுசியா மன்சில், காத்தான்குடி-3.
[ கதை வாசித்தல், முத்திரை சேகரித்தல் ]

எம். எம். ஹலீம் தீன் (18) யுஞ கொ ஹ தென்னே, அக்குறணை-4.
[ முத்திரை, பழைய நாணயம், வியூகாட்ஸ் சேகரித்தல் ]

பெ. நாகநாதன் (15) 15/24, ஸ்டுவாட் ஸ்றிட், கொழும்பு-2.
[ வானெலி கேட்டல், நூல்கள் வாசித்தல் ]

எஸ். எச். எல். முஹம்மட் ஆஸீக் (21) ஹமீட் விலா, அக்குறணை.
[ இன்னிசை விருந்தளித்தல், பேனு நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல் ]

எஸ். ரகுநாதன் (17) ராணி இல்லம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
[ சிறுகதை எழுதல், தொடர் கதை படித்தல், வானெலி, சினிமா, நண்பர்கள் தொடர்பு ]

எஸ். குணரட்ணம் (21) 441, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
[ சினிமா பார்த்தல், பத்திரிகை வாசித்தல் ]

எஸ். சத்தியசீலன் (18) தாமர் லேன்- புலோலி கிழக்கு- பருத்தித்துறை.
[ வானெலி கேட்டல்- நண்பர்களுக்குக் கடிதம் எழுதல் ]

## சிரித்திரன் சந்தா விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ———————————————

விலாசம்: ———————————————

———————————————

1 வருட சந்தாப் பணமாக ரூபா 6/-
6 மாதச் சந்தாப் பணமாக ரூபா 3/-

இத்துடன் அனுப்புகிறேன். ஏற்றுக்கொண்டு ———— மாதம் தொடக்கம் சிரித்திரனை அனுப்பிவைக்கவும்.

——————　　　　——————

திகதி　　　　கையொப்பம்

[பணத்தைப் போஸ்டல் ஓடராக, மனேஜர் சிரித்திரன், 101/4 சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.]

சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது; சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது; ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது; உண்மையோ குருட்டு நம்பிக்கைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விடுகிறது. —இங்கர்சால்.

## பேனு நண்பர் விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ———————————————

முகவரி: ———————————————

———————————————

பொழுதுபோக்குகள்: ———————————————

———————————————

தயவு செய்து பேனு நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இத்துடன் சிரித்திரன் 1வருட சந்தாப் பணம் அனுப்பியுள்ளேன்.

——————　　　　——————

திகதி　　　　கையொப்பம்

**வாசகர்களே! 1வருட சந்தா செலுத்திப் பேனு நண்பராகுங்கள்.**

# வாழ்வளித்தவன்

■ எச். எம். எம். கலீல் ■ ■ ■

கட்டிலில் புரண்டு கொண்டிருந்த ராஸீக்கை நித்திராதேவி அணுக மறுத்து விட்டாள் போலும். எண்ணக் கடலின் சிந்தனை அலைகளில் தத்தளித்தது, அவனுள்ளம். தனது தங்கை ரவுபாவுக்கு இன்னும் இடம் பார்க்கவில்லை. தந்தையை இழந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. தந்தை எதைத்தான் சம்பாதித்து வைத்து விட்டுச் சென்றார். ஏதாவது பணத்தை - சொத்தைச் சம்பாதித்து வைத்து விட்டுச் சென்றிருந்தால்... ஆம், ராஸீக்கை எண்ணக் கடலினுள் வைத்தே நித்திராதேவி அணைத்துக் கொண்டாள்.

அன்றொரு நாள் பாடசாலை விட்டு வீடு திரும்பும்போது பெருமழை காரணமாக, பாதை ஓரத்திலிருந்த, மஜீதின் வீட்டுத் திண்ணையை அடைந்தான், ராஸீக். வீட்டின் உள்ளே மும்முரமாகப் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருந்தது. அவனையறியாமலே அவனது செவிகள் அங்கே பேசுவதைக் கேட்கத் துடித்தன. அந்த வீட்டினுள்ளே...

'அந்தக் குமரு ரவுபாவுக்கு கல்யாணமே நடக்காது போல் இருக்கிறதே. அவளின் தாயும், அண்ணனும் என்னதான் செய்யப் போகிறார்களோ...'

அதற்கு மேல் ராஸீக்கால் அங்கே நிற்க முடியவில்லை. சிந்தனையுந்த, அடைமழையையும் பொருட்படுத்தாது நடக்கத் தொடங்கினான்.

பெண்ணொருத்தி பேச, பூமி அதிரும்; இரு பெண்கள் பேசின், வானின் நட்சத்திரங்களே உதிரும்; மூவர் பேசிடின், அலைகடல் வற்றுமென்பர். 'இக்குடும்பமே பேசினால், எங்கள் குடும்ப கௌரவம் என்னாகுமோ...?' — அவன் எண்ணத்தில் ஒரு போராட்டம்!

அடுத்த நாளே ராஸீக், மணமகன் தேடும் படலத்தை ஆரம்பித்தான். அவனது கால்கள், பல கல்யாணத் தரகர்களின் வீடுகளை நோக்கி நடை பயில; உள்ளம், தங்கைக்கு வாழ்வு கிடைக்குமா என்றேங்கியது.

தரகர்கள், தம்மால் இயன்றளவு முயற்சிப்பதாகக் கூறினர்.

அன்று மாலை, ஒரு தரகர் வீட்டுக்கு வந்தார். 'அஹமது லெவ்வையின் மகன் ஜலீலை உங்களுக்குத் தெரியுந்தானே! நல்ல பையன். சீதனப் பணந்தான் மூவாயிரம் ரூபா வேண்டுமாம். உங்கள் விருப்பம் எப்படியோ...? இம் மாதமே வேண்டுமானாலும், திருமணத்தை வைத்துக்கொள்ள முடியும்...' என்றார். ஜலீலைப்பற்றித் தெரிந்தவனாதலால், தங்கையின் நல்வாழ்வு குறித்துச் சம்மதித்தான். அவர் தரகரல்லவா! 'தொரே, ஒரு பத்துரூபா கிடைக்குமா' என்றார். 'சா!' என்றான், ராஸீக். 'காரியத்தைச் சிறப்பாக முடித்து விடுகிறேன், கவலையை விடுங்கள்' என், அந்தப் பத்து ரூபாவுக்காகத் தெம்புரை கூறி நடந்தார், தரகர்.

மூவாயிரம் ரூபா பணம் ... ராஸீக்கின் தலை சுழன்றது. எனக்குக் கிடைக்கும் சம்பளம், வீட்டுச் செலவுக்கே போதாதிருக்கும் போது பணத்திற்கெங்கே செல்வேன். சீதனப் பணம், கல்யாணச் செலவு - ஓராயிரமாவது தேற வேண்டுமே!' - தவியாய்த் தவித்தான், அவன்.

ஏதோ நினைத்தவன் போல், தன் இனத்தவரான செல்வந்தர் ஒருவரை நாடினான். 'ஐயோ இப்போது வசதி இல்லையே!' என்று, கையை விரித்தார் அவர், ஏழை என்ற ஒரே காரணத்தால்! வட்டிக் கடைக் காரர்களை அணுகிப் பார்த்தான்; பலனில்லை. 'ஹூம்' பெரு மூச்சுடன் வீடு நோக்கி நடந்தான்.

'... ஏழையாய்ப் பிறந்தது எங்கள் குற்றமா? எங்களை எந்தப் பணக்காரனாவது ஏறெடுத்துப் பார்க்கிறானா. உம்மா...! எத்தனையோ பேரிடம் கேட்டேன்; எல்லோரும் மறுத்துவிட்டார்கள்; என்ன செய்வது...? என்று வேதனையால் வெதும்பினான் ராஸீக். தாயுள்ளம் தவித்தது! சிற்றெறும்பு உணவு சேமிப்பது போல், அப்பம் சுட்டு விற்றுத் தான் சேகரித்து வைத்திருக்கும் ஆயிரம் ரூபா பற்றித் தனயனுக்குக் கூறி, அவன் தவிக்கும் மனதுக்குச் சாந்தியளித்தாள் அன்னை. அது கேட்டு அவன் முகத்தில் பரவிய மகிழ்ச்சி ஒளி, ஒரு கணப் பொழுதிலேயே மாறி இருள் கப்பியது. ஆயிரம் ரூபா கொண்டு எப்படி....

மறுநாள் ஒரு முடிவெடுத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றவன், தனது அன்பிற்குப் பாத்திரமான சக ஆசிரியரிருவரிடம் விடயத்தைக் கூறினான். மாத முடிவில் ஒழுங்கு செய்து தருவதாகக் கூறினார்கள். அவன் மகிழ்ச்சி எல்லை மீறியது.

போயா விடுமுறைக்கு வீடு வந்தான் ராஸீக். பணத்துடன் வீடு திரும்பலாம் என்றிருந்தவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பதினைந்தாம் திகதியே 'நிக்காஹ்' முடிந்துவிட வேண்டும் என்றும், பதினெட்டாந் திகதி திருமணத்தையும் முடித்துவிட வேண்டுமென்றும், அந்த வருடத்திலே அதுபோல் சிறந்த நாள் வேறு கிடையாது என்பதுமான தரகரின் செய்தி அது.

---

**ஒருத்தி:** உன்னுடைய கல்யாணத்திற்கு வரமுடியாமல் போச்சு... மன்னிக்கவும்.

**நடிகை:** எனது அடுத்த திருமணத்திற்கு வரலாமே ... கவலைப்படாதே!

---

ஒருவர்: என்னுடைய மகளை உங்கள் மகனுக்குக் கல்யாணம் செய்தால் என்ன?

மற்றவர்: உத்தியோகம் இல்லாதவனைக் கல்யாணம் செய்திட்டு பிச்சை எடுக்கிறதா?

ஒருவர்: மகாவலித் திட்டத்திலே எல்லாருக்கும் வேலை கிடைக்கப்போகுதாம். யோசியாமல் தாலியைக் கட்டட்டு.

அன்று மாலை அஹமதுலெவ்வையின் வீட்டுக்குச் சென்று 'நாளை எக் காரணங் கொண்டும் நிக்காஹ் விஷயத்தை வைத்துக் கொள்ள முடியாது; திருமணத்தன்றே அதையும் வைத்துக் கொள்வோம்!' என்றான் ராஸிக். இதைக் கேட்ட அவர் துள்ளி எழுந்து 'என்ன...' என்றார். பிறகு 'ஏன், குறித்த தினத்தில் வைத்துக் கொண்டால் என்ன?' எனக் கேட்டார். சற்று நேர சிந்தனையின்பின் 'நண்பனொருவன் ஈராயிரம் ரூபா தரவேண்டும். அவன் திரு மணத்தன்றுதான் தருவான். அது வரை...' என்று நிறுத்தினான் ராஸிக். 'திருமணத்தை மட்டும் நிறுத்த முடியாது. அழைப்பிதழ் தயாராகி விட்டது. ரொக்கத்தைக் குறித்தபடி ஒழுங்கு செய்து விடுங்கள்' என்று கூறி விடை கொடுத்தனுப்பினர், அஹமது லெவ்வை.

ராஸிக் தாயிடம் நடந்தவற்றைக் கூறினான். எப்படியோ அல்லாஹ் காரியத்தைச் சிறப்பாக முடித்து விட்டாற் போதுமென்றாள் தாய். அண்ணனும், தாயும் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள் என்றெண்ணி ஒரு கணம் கலங்கினாள், ரவுபா. அடுத்த கணம் தனது வாழ்வின் மலர்ச்சியை எண்ணி மகிழ்ந்தாள்.

திருமண அழைப்பிதழ்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பறந்தன. தனது கையிலிருந்த பணத்தையெல்லாம் திருமணத்திற்காகுமான வேலைகளிற் செலவு செய்தான், ராஸிக். நண்பர்கள், தனது இக்கட்டான நிலையுணர்ந்து விரைவில் பணம் தந்துதவுவார்கள் என்ற நம்பிக்கை அவன் கையை நீட்டி விட்டது.

வேலை சற்று ஓய்ந்தபின் பாடசாலைக்குச் சென்று நண்பர்களிடம் பணத்தைக் கேட்டான். 'ஐயையோ... முடியவில்லையே!' என்றனர் நண்பர்கள். அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டே வீடு நோக்கி நடந்தான்.

தாயுடன் கலந்தாலோசித்தபின் தரகரை அழைத்து, கல்யாணம் முடிந்து ஐந்து தினங்களில் ரொக்கத்தைத் தருவதாக உடன்படிக்கை செய்யுமாறு தன் நிலை பற்றி விளக்கினான். சிறிது நேரத்தில் ஜுரத்தின் பிடியில் சிக்குண்டதால் ராஸிக் விஷயத்தை மறந்துவிட்டார்.

பொழுது இன்னும் நன்றாகப் புலரவில்லை. ரவுபா அதிகாலையிலே துயிலெழுந்து குளித்துப் புத்தாடையணிந்து புதுப் பொலிவுடன் காட்சியளித்தாள். ஆம்! அன்றுதான் திருமண நாள் எவ்வளவு காலம் எதிர்பார்த்திருந்த இன்பத் திருநாள்!

ராஸிக்கின் நண்பர்களும் ரவுபாவின் நண்பர்களும் பரிசுகளேந்திய கரங்களுடன் திருமண வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தனர். பலர் வருவதும் சிலர் போவதுமாக ஒரே கொண்டாட்டமாக இருந்தது திருமண வீடு! ராஸிக்குடன் ஏனைய உறவினர்களும் ஒன்றுபட்டு வருவோர்களை அன்புடன் வரவேற்றனர். தனது உயிருக்குயிரான நண்பன் ரஸாக்கினுடைய காரைக் கண்டதும் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அன்புடன் வரவேற்றான் அவனை!

ரவுபாவின் தோழிகள் வம்பு பேசிப் புதுப் பெண்ணைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

இரவு பதினொரு மணியாகியும் மாப்பிள்ளை வரவில்லை. வந்தவர்களிடையே பரபரப்பு ஏற்படத் தொடங்கியது. குறிப்பிட்ட நேரத்தில் வருவதாகக் கூறிய மாப்பிள்ளை இவ்வளவு நேரம் வராதது என்னவோ! தரகரையாவது காணவில்லையே! நான் போய் எதற்கும் பார்த்து வருகின்றேன் எனக் காரேறிச் சென்றான் ராஸிக்.


மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றதும் ராஸிக் மலைத்து விட்டான். அஹமது லெவ்வை வெற்றிலை மென்றபடி அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருந்தார். மாப்பிள்ளை சோகமே உருவாக ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தார்.

'என்ன நடந்து விட்டது! ஏன் இப்படி ஒவ்வொருவரும் உம்மென்று இருக்கிறீர்கள்! மாப்பிள்ளையை எதிர்பார்த்து வந்தவரெல்லாம் இருக்கிறார்களே' என்றான் ராஸிக். அஹமது லெவ்வை சீறிவிழுந்தார். 'உங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளை! சீதனப் பணம் வந்தால்தான் இங்கிருந்து மாப்பிள்ளை புறப்படுவார். சொன்னபடி நடக்க நாணயமில்லை! நாங்கள் மானங் கெட்டவர்களா? தரகர் ஒன்றும்... தரகருக்கா மாப்பிள்ளை, கூறியபடி நடக்க வேண்டியது தானே,' என்று அவனைப் போகவிடாது பேசினார் அஹமது லெவ்வை. நிலைமையை விளக்கிக் கெஞ்சினான் ராஸிக்! பணம் வராமல் காலை எடுக்க மாட்டார் மாப்பிள்ளையென்று திடமாக கூறிவிட்டார் மாப்பிள்ளையின் தந்தை அஹமது லெவ்வை.

☐

மாப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்திருந்த அனைவரும், பித்தம் பிடித்தவனைப்போல் ராஸிக் ஓடிவருவதைக் கண்டு பீதியடைந்தனர். தேம்பித் தேம்பி அழுதுகொண்டே என்

[31-ம் பக்கம் பார்க்க]




சிறப்புக் கதை 'தீட்டு ரொட்டி' மிகவும் சிறப்பாக இருந்தது. சிரித்திரா, மாதமிரு முறை வந்து எம்மைச் சிரிக்க வைப்பாயென எண்ணித் தினமும் காத்திருக்கிறோம்.

**எச். எம். எம். கலீல், எச். எம். எம். இக்பால், முஹிடீன் அஸ்ஹா**

ஃ

சித்திரை இதழில் ஒய்யப்பங் கங்காணியும், மிஸிஸ். டாமோடிரனும் சந்தித்துக் கொண்டது சிரித்திரனின் விசேஷ அம்சமாக இருந்தது. ஒய்யப்பங்கங்காணி, மைனர் மச்சான், மகுடியார் ஆகிய பிரசித்தி பெற்ற கதாபாத்திரங்களையும் சந்திக்க வைத்து எமது ஆவலைப் பூர்த்தி செய்யவும்.

**ஜி. செபஸ்தியன், மெயின் வீதி, செங்கலட்டி.**

ஃ

சித்திரை இதழ் சிரித்திரனின் அமைப்பிலும், உள்ளடக்கத்திலும் பொலிவினைக் கண்டு பெருமிதமுற்றேன்.

**எஸ். தெய்வீகன், இடைக்காடு, அச்சுவேலி.**

ஃ

நான் சில விஷயங்களை அனுப்பியிருந்தும் பிரசுரிக்கவில்லையே என்று தப்பாக நினைக்காமல்; சஞ்சிகை நல்ல முறையில் அமையவேண்டும் என்ற நோக்கத்தில் நீங்கள் சிறந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவதையிட்டுப் பெருமைப்படுகிறேன். இதே கண்ணியமும், கவனமும், கண்ணியமான போக்கும் உங்களுடன் இருக்கும் வரை சிரித்திரன் பத்திரிகை வெற்றிநடை போடும்,

**சி. பாலசிங்கம், கொட்டடி, யாழ் நகர்.**

ஃ

சிரித்திரன் மேன் மேலும் முன்னேறி வளர்ச்சியடைந்து வரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**அ. பாலசுப்பிரமணியம், கல்நாட்டினகுளம், வவுனியா.**

ஃ

'நான் கண்ட கனவு' என்று ஒரு பகுதியை ஆரம்பித்தால் சுவையான கனவுகளைப் படிக்கலாம்.

**ந. குணசிங்கம், பருத்தியடைப்பு.**

ஃ

சிரித்திரனை அலங்கரிக்கும் நகைச்சுவைத் துணுக்குகள் நல் விருந்தாக இருக்கின்றன. பல் விழுந்த தாத்தாக்கள் என்ன, பகட்டுக்கார மைனர்கள் என்ன, பச்சிளம் பாலகர் என்ன, எல்லோரும் விரும்பிப் படிக்கும் சஞ்சிகை சிரித்திரனே.

**எஸ். எம். ஏ. ஸலாம், 14/ஏ, எம். ஓ. லேன், யாழ்ப்பாணம்.**

ஃ

சிரித்திரன் மிகவும் முன்னேறியுள்ளது என்பதற்குச் சித்திரை இதழ் சான்று அளிக்கின்றது.

**ராமேஸ்வரன், அம்பாறை.**

ஃ

மொழி நடைக்கும் ஓர் உரிய இடத்தைத் தங்கள் பத்திரிகையில் இடம்பெறச் செய்யுங்கள். ஈழத்தில் தமிழ் இலக்கியம் வளரவேண்டும் என்ற ஆர்வத்துடன் செயல் புரியுங்கள். எங்கள் உதவி என்றும் உங்களுக்கே.

**சி. எஸ். பாலசுந்தரம், தமிழ்த் துறை, இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.**

—

### சிரிப்பின் சிறப்பு

வீரமாமுனிவர் மேல் நாட்டிலிருந்து சமயத் தொண்டு புரிவதற்குத் தமிழ் நாட்டில் கால் வைத்தார். தமிழ் நாட்டில் போதனைகள் செய்வதற்கு இவருக்குத் தமிழ் கற்கவேண்டியிருந்ததால் கற்றூர்.

ஒருமுறை தமிழ் மொழியில் விரிவுரை செய்துகொண்டிருக்கும் போது ஒரு உதாரணத்திற்காக 'கோழி தன் குட்டிகளைக் காப்பது போன்று' என்று கூறிவிட்டார். இதைக் கேட்டோர் சிரிப்பை அடக்கமுடியாமல் பெரிதாகச் சிரித்தார்கள். இதனுல் வெட்கம் கொண்ட இவர், தமிழை ஆய்ந்து கற்றுக் கம்பனின் காவியத்தைப் போல் தானும் ஒரு காவியம் படைக்கவேண்டும் என்று சபதம் பூண்டுகொண்டார்.

இவரின் முயற்சி தமிழிற்கு உயர்ச்சியைக் கொடுத்தது. 'தேம்பாவணி' எனும் காப்பியத்தை இயற்றி, தமிழின் வசனநடை வளத்திற்கு வித்திட்டார். இவரின் தமிழ் அறிவு ஆழப் பதிந்து, பரந்துவிட்டது. அன்று சிரித்தவர்கள், பின்பு வியந்தார்கள். அந்தச் சிரிப்பே இவரையும், தமிழையும், சிறப்பித்தது.

# இதய ஓலம்

நெல்லை க.பேரன்

என்ரைசீவியம் முழுதும் நான் இந்த இரண்டு குமர்களோடயும் அயிட்டப்பட்டுக் கொண்டுதான் இருக்க வேணுமோ? ஐயோ கட வுளே! நீ இந்த உலகத்திலை இருந் தால் எங்கடை கயிட்டங்களைக் கண்ணெடுத்துப் பார்க்க மாட் டியோ? இந்தமுறை பொயிலைக் கண்டும் நல்லாய் வந்தது. போன தடவையைப்போல அதிகமாய் அழுக்கந்தைப்பூச்சி பிடிக்கேல்ல. இந்த முறை பொலிடோல் அடிக் கிற சிலவும் அதிகம் இருக்கேல்லை. எல்லாரும் சின்னத்தம்பிக்கு இம் முறை பொயிலை நல்லாய் வாய்ச் சிருக்கு எண்டு வாயூறினுங்கள். இப்ப மழை வெள்ளம் போட்டுப் பொயிலைக் கண்டெல்லாம் நாச மாப்போச்சு. செத்த சுப்பற்றை குத்தகைத் தறை ஒரே பள்ளக் காணி. எப்பன் எண்டவுடனும் வெள்ளம் முழங்காலளவுக்கு வந்துவிடும். அதுவும் இம்முறை காவலிருந்து பெஞ்சது மாதிரி எதிர்பாராத மழை. தொடர்ந்து இரண்டு கிழமைக்கு நீடிச்சதிலை தறையெல்லாம் வெள்ளம் மூடிப் போட்டுது. பொயிலைக் கண் டெல்லாம் பாறி, இலை ஒரு சதத் துக்கும் உதவாமல் அழுகிப் போச்சுது. தறையைப் பார்க்கப் பார்க்க என்ரை வயிறு பத்தி எரி யுது.

இந்தப் பேய் மழைக்கு என்ரை வீடு, வாசல், மாடு, கண்டெல்லாம் அள்ளுப்பட் டதைக் கூட என்னாலை பொறுத் துக்கொள்ள முடிஞ்சுது. நான்... ஐயோ... என்ரை குமருகளோட தோட்டத்திலை அல்லும் பகலும் பாடுபட்டு வளர்த்த பொயிலைக் கண்டு போனதுதான் என்னாலை பொறுக்க முடியேல்லை. நான் தோட்டக் கிணத்திலை துலாவிலை அள்ளேக்கை நான் செஞ்சு குடுத்த ஓலைப் பட்டையளைக் கொண்டுவந்து 'அப்பு என்ரை பட்டேக்கை வாரணை... இஞ்சை என்ரை பட்டேக்கை வாரணை' என்று சொல்லிச் சொல்லி என்ரை பொடிச்சியள் என்ன ஆசையாகத் தண்ணி சுமந்து வார்த்தவளள். ஐயோ...அதுகள் மத்தியான வெய்யிலிலும் நிண்டு உச்சித் தண்ணி போட்டுத் தந்து புல்லுக் கிண்டிப் பலுவ டிச்சி எவ்வளவு தூரம் பாடுபட் டதுகள். ஆம்பிளைப் பொடியன் கள் இல்லாத குறைக்குப் பெட் டையள்தான் எனக்கு எல்லாம். மூத்தவள் படிச்சுக்கொண்டிருக் கேக்கையே தாய் செத்துப்போ னள். காய்ச்சல் எண்டு பாயோட ஒரு கிழமையாய்ப் படுத்தவள். கரவெட்டி ஆசுப்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டுபோய் மருந்து வாங்கிக் கொடுத்தனுன். கவுன் மேந்து ஆசுப்பத்திரிதான். பிறகும் மூண்டு நாள் சரியான காய்ச்சல் காய்ஞ்சது. வந்த காய்ச்சல் அவளையும் கூட்டிக் கொண்டு போட்டுது. அப்பவே நானும் கூடப்போயிருந்தால் இந் தக் குமர்கள் இப்ப விடுகிற கண் ணீரைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டி வந்திராது. அவளுக்குக் காய்ச்சல் வந்த நேரம் எல்லாரும் பெரிய டாக்குத்தர் நாகநாதனிட் டக் கொண்டுபோய்க் காட்டச் சொன்னவை. நாகநாதனிட்டப் போறதெண்டால் கார் பிடிக்க வேணும். அவரோட ஒரு ஊசிக்கு மட்டும் ஊருப்பட்ட காசுகள் குடுக்கவேணும். ஊர்ச் சனங்க ளுக்கென்ன? சும்மா ஒவ்வொண் டாச் சொல்லுவினம்... நான் எல்லாத்துக்கும் காசுக்கு எங்கை போறது? அவள் மனிசி சுகத் தோட மூக்கும் முழியுமாக இருந் தாலும் பரவாயில்லை. ஏதோ கீரையைக் கிரந்தையை வித்துச் சந்தைக்காலை நாலு பணம் கொண்டு வருவள். இப்ப அவ ளும் போட்டாள். நானும் பொடிச்சியளுந்தான். மூத்தவளை பள்ளிக்குப் போகாமல் நிற்பாட் டினன். வீட்டிலை ஒரு நேரச் சோறு ஆக்கிப் போடக்கூட ஆக்களில்லை. நான் வேர்வை சிந் திப் பொயிலைக் கண்டுக்கை அடிச்செல்லி எடுத்துப் பாத்தி கட்டி மண்ணைக் குடுத்துப் போட்டு வந்தால் பசிக் களையோட சாப்பிட ஏதேனும் வேண்டாமே? மூத்தவள் ஏதோ

---

**ஒருவர்:** என்னுடைய மகன் கடிதம் எழுதினுல் நான் அகராதி யைத்தான் நாடவேணும்.

**மற்றவர்:** பரவாயில்லையே, நீ அதிஷ்டக்காரன்தான். என்னு டைய மகன் கடிதம் எழுதினுல் நான் 'செக்' புத்தகத் தைத்தான் நாடவேண்டும்.

---

பச்சரிசியைப் போட்டுக் கஞ்சி எண்டாலும் ஆக்கித் தருவள்... அவள் ஆக்கித் தாற கஞ்சித் தண்ணியோட ரெண்டு வெங்காயம் பிஞ்சுமிளகாய் வெட்டிப் போட்டுக் கொஞ்சம் உப்பும் போட்டுக் கலக்கிவிட்டு முத்தத்திலை நிக்கிற பிலா மரத்திலை பிலாவிலை பிடுங்கிக் கறண்டி மடிச்சு அள்ளிக் குடிச்சால்...ஆ... என்ன ஆனந்தம் தெரியுமே! என்ரை பிள்ளைக்கு மட்டும் நல்ல வசதி இருந்தால்... கஞ்சியென்ன வகைவகையான சோறு கறி ஆக்கிப் போடுவள். ம்... இளையவள் இப்பவும் படிச்சுக்கொண்டுதான் இருக்கிறாள். அவளின்ரை பள்ளிக்கூடச் செலவுகளுக்கே என்னாலை சுடுகட்டேலாமல் இருக்கு. இனிமேல் என்ன செய்யப் போறனோ தெரியேல்லை.



**கணவன்:** நீ எல்லாப் படத்தையும் பார்; ஆனால் தயவுசெய்து சண்டைப் படம் மட்டும் பார்த்துவிடாதே.

**மனைவி:** ஏன் நான் சண்டைப் படம் பார்த்தாலென்ன...?

**கணவன்:** படத்திலையுள்ளது எல்லாத்தையும் காப்பியடிக்கிறீங்க. சண்டைப் படத்தில் கராட்டியைப் பாத்திட்டு வந்து என்னிலை விட்டால்...?!

— ஜோக்கிரட்டீஸ்

இந்த முறை பொயிலைக் கண்டு வந்த மாதிரிக்குப் பச்சைக் குத்தகை கொடுத்தாலும் இல்லை இல்லையெண்டு இரண்டாயிரம் ரூபா தேறும். செத்த சுப்பர் நாலைஞ்சு வருஷமாகக் கைவிட்டுக் காவிளாயும், நாகஞ்சூறியும், பாலாமணக்கும் படர்ந்திருந்த அந்த வெற்றுத் தறையை ஒரு ஆமான நிலைமைக்குக் கொண்டுவர நான் எவ்வளவு பாடுபட்டன்? கொத்துக்காரரைப் பிடிச்சால் 'கள்ளக்கொத்து'க் கொத்திப்போடுவங்கள் எண்டுபோட்டு நானே தன்னந் தனியனாக நிண்டு செடியெல்லாம் பிடுங்கி, மேடு பள்ளந் தட்டி, தாய்க்கொத்துக் கொத்தி, கட்டிபட்ட மண்ணைத் தட்டிப் பதமையாக்கி எவ்வளவு கயிட்டப்பட்டன்? என்ரை உடலிலை இருக்கிற முழுச் சக்தியையும் பிரயோகிச்சு இரத்தமெல்லாம் வியர்வையாகச் சிந்த அந்தத் தறையிலை பாடுபட்டன். பொயிலை நல்ல மதமதப்பாகச் செழிச்சு வளரேக்கை எவ்வளவு சந்தோஷப்பட்டன்? கொழுத்த பணக்காரப் பொம்பிளையளைப் போல என்ரை பொயிலைக் கண்டும் நல்லாய் நீர்ப்பிடிச்சு இலைகள் சதைவைச்சு எவ்வளவு அழகாக வளர்ந்துவந்தது? அப்பிடியே பச்சைச் சாறு பிடிச்சுத் தடிப்பேறி மொற மொறவெண்டு பார்வைக்கு லட்சணமாக இருந்தது. பாணி தோய்ச்சு உலர்த்தினால் இன்னும் எவ்வளவோ தடிப்பாக வரும் எண்டு எண்ணிப் பெருமைப்பட்டனான். என்ரை மூத்தவள் பெரியவளானபோது கூட நான் இவ்வளவு தூரம் சந்தோஷப்பட்டிருக்க மாட்டன். பக்கத்து வீட்டுப் பொன்னம்மாக் குஞ்சிதான் அப்ப வந்து ஏதோ எல்லாம் புக்கை பொங்கிப் படைச்சு வாழ்த்திவிட்டுப் போனவ. என்ரை பெட்டை சாமர்த்தியப்பட்டதுக்கு நான் ஒரு மூக்குத்திகூட வாங்கிப்போட முடியேல்லை. செத்துப்போன தாயின்ரை ஒரு நல்ல சீலையைக் கட்டித்தான் வடிவு பார்த்தன்.

எங்கடை ஊரிலை கார், கடை எல்லாம் வைச்சுப் பெரிய பணக்காரராக இருக்கிற மகாலிங்கத்தாற்றை பெட்டைக்கும் அண்டைக்குச் சாமர்த்தியச் சடங்கு நடந்தது. அவற்றை வீட்டை வந்துபோன கார்களின்ரை கணக்கே என்னாலை சொல்ல முடியாது. லவுட்ஸ்பீக்கர், சின்ன மேளம் எல்லாம் வந்து பெரிய டீங்காக நடந்தது. இனசனத்தையெல்லாம் கூப்பிட்டு இறைச்

சியும் சோறும் குடுத்தவையள். ஏன் சிலபேருக்கு நல்லாய்ப் பருக்கியும் விட்டவையள். காசுள்ளவை செய்யினமெண்டு எங்களாலேயும் முடியுமே? மகாலிங்கத்தாற்றை பெட்டையின்ரை சாமத்தியச் சடங்குச் சிலவு என்ரை இரண்டு பொடிச்சியளோட கலியாணத்துக்குக் காணும்.


இந்தமுறை எப்பிடியும் பொயிலே வித்து இரண்டாயிரம் ரூபா பிரட்டிப் போடுவனெண்ட துணிச்சலிலே மூத்தவளுக்கு ஒரு இடத்திலே கலியாணம்பேசிமுடிவு செய்தனுன். மாட்டுத் தரகர் கறுப்பையாதான் எங்கினையோ தொழில் விஷயமாகப் போன இடத்திலே எனக்கும் இந்த மாப்பிள்ளையைப்பற்றி அறிந்துசொன்னவர். பொடியன் வவனிக்குளத்திலே நல்ல கமமாம். பொடிச்சியை நல்லாய் வைச்சுக் காப்பாற்றக்கூடியவன் எண்டு ஆசை காட்டினுர். அவர் சொல்லுகிறது அனேகமாகப் பிழை வாறதில்லே எண்ட நம்பிக்கையிலே நானும் ஓமெண்டன். எல்லாம் பேசிச் சரி வருமெண்டு இருக்கேக்கை பொடியனுடை அம்மாக்காறி நாலாயிரம் ரூபா சீதனமில்லாமல் பொடியனை அங்காலே இஞ்சாலே அசைய விடமாட்டன் எண்டு பிடிவாதம் பிடிக்கிருளாமெண்டு கறுப்பையர் சொன்னுர் எப்பிடியும் இந்தச் சம்பந்தத்தைப் பேசி முடிச்சுப் போடவேணும். பொடிச்சியும் தாயில்லாத பிள்ளை . அவளின்ரை மனசை நோகவிடக்கூடாது. நீ வீட்டுக் காணியை ஈடு வைச்சு எப்பிடியும் [illegible] நான் மிச்சமெல்லாம் செய்து தாறன் எண்டு சொன்னுர். ஈடு வைக்கிறதுக்கு ஆரட்டைப் போறது எண்டு முழிசின என்னை மகாலிங்கத்தாரிட்டை வழிகாட்டிவிட்டவரும் கறுப்பையாதான். மகாலிங்கத்தாரட்டை முந்தியே தோட்டத்துக்கு ஒரு லோட்டு எரு வேண்டிப் போடுவதற்காக முன்னூறு ரூபா கடனுக வாங்கினனுன். இப்ப இரண்டாயிரத்துக்கும் என்ன சொல்லுவரோ எண்டு யோசிச்சுக் கொண்டுதான் போனனுன்.

இரண்டாயிரம் ரூபாவுக்கு நான் குடியிருக்கிற காணி மட்டும் பெருது. வீட்டையும் சேர்த்து ஈடுவைக்கவேணும். அத்தோட இம்முறை பொயிலே வித்த உட


# திலக் ஏஜென்சி

**113, டாம் வீதி, கொழும்பு - 12**

**எங்களிடம் சகல விதமான நூல், கயிறு தினுசு வகைகளும்; செம்பு, பித்தளை, அலுமினியச் சாமான் வகைகளும்; G.I. தாச்சி, G.I. வாளி தினிசுகளும்; சலங்கை, செம்பு, தகடு, அலுமினியக் கரண்டித் தினிசுகளும், அலுமினிய-இரும்பு கேற்றில் வகைகளும், தையல் நூல் தினிசுகளும்; பித்தளை, இரும்பு ஸ்திரிக்கை வகைகளும், மற்றும் சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்களும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**



ஒருவர்: அரசியல் வாதிகள் ரொம்பப் பொல்லாதவனுங்க!

மற்றவர்: ஏன் அண்ணைச்சி?

ஒருவர்: நண்பன் நண்பனை வருஷத்தில் ஒரு நாளைக்கு- அதுவும் ஏப்பிரல் பூலில் தான் முட்டாளாக்குவான். இந்த அரசியல்வாதிகள் இருக்கிறுன்களே, வருஷம் முழுவதும் முட்டாள் ஆக்குறுர்கள்.

—ஜோக்கிரடீஸ்.

னும் ஈட்டை மீண்டுபோட வேண்டும் எண்டெல்லாம் ஊருப்பட்ட சட்டங்கள் பேசின பிறகே மகாலிங்கத்தார் காசு தர ஒப்புக்கொண்டிருந்தார். வாற நாளுக்குச் சோத்தைக் குடுப்பிச்சுத் தாலியைக் கட்டுவிப்பம் எண்டு தான் திட்டமிட்டிருந்தனுன். என் திட்டமெல்லாம் பாழாய்ப் போச்சுது. வெள்ளம் வந்து பயிரை நாசமாக்கினதோட நில்லாமல் வீட்டையும் அடிச்சுக் கொண்டு போட்டுது. ஒரு சோடி பசுக்கள், நல்ல வடக்கன் மாடுகள் இரண்டு, போன வேள்வியிலை அவிழ்த்துவந்த ஒரு கிடாய்க்குட்டி, கொடிகாமச் சந்தையிலை வாங்கின நாலு பேட்டுக் கோழிகள். இவைதான் என்ரை சொத்துக்கள். இவை எல்லாத்தையும் வெள்ளம் அள்ளிக்கொண்டு போட்டுது. என்ரை வாழ்க்கையிலேயே இந்த முறையப் போலக் கோரமான வெள்ளத்தை நான் காணேல்லை. என்ரை ஆட்டுப்பட்டியும் சரிஞ்சு கூரையோட வெள்ளத்திலை அள்ளுப்பட்டுக்கொண்டு போன காட்சியை என்னுலை எப்படி மறக்கேலும்? கிராமத்துச் சனங்கள் எல்லாம் உடுத்த துணியளோடையும், கைகளில் ஏப்பிட்ட சாமான்களோடையும் கிராமத்து மேட்டுப் பகுதியில் இருந்த கவுண்மேந்துப் பள்ளிக் கூடத்திலைதான் தங்கியிருக்கிறம். வெள்ளத்திலை சேதப்பட்ட எங்களுக்குக் கவுண்மேந்திலை பாண் குடுத்திச்சினம். விசுக்கோத்து, சாப்பாடுகள் எண்டு எல்லாம் குடுத்தவையள். ஒவ்வொருத்தருக்கும் புதுசாக உடுப்புகள் குடுத்தவையள். எனக்குக்கூட ஒரு சாரம் கிடைச்சுது. எல்லாம் ஒரு கிழமைக்குத்தான். வெள்ளம் வடிஞ்சு போச்சுது. உதவியளும் குறைஞ்சு போச்சுது. இரண்டொரு எம்.பீ மார் வந்து எங்களைப் பார்த்துக் கதைச்சுப்போட்டுப் போச்சினம். நான் இரத்தம் சிந்திப் பாடுபட்டு வளர்த்த பயிரெல்லாம் நாசமாப் போச்சுது. இந்த வருஷம் குத்தகைக் காசு குடுக்காவிட்டால் செத்தசுப்பற்றை மேள் என்னைச் சும்மா விடமாட்டாள். இனித் தறையே தரமாட்டினம். என்ரை பொடிச்சியின்ரை கலியாணத்துக்காக என்ரை வீட்டை ஈடு வைக்கிறதுக்குச் சம்மதிச்ச மகாலிங்கத்தாரும் இனிமேல் ஒண்டும் தரமாட்டார். வீடெல்லாம் இடிஞ்சு வெள்ளத்திலை போன பிறகு அவரேன் காசு தரப் போறுர்? என்ரை மேளொட கலியாணமும் நிண்டு போச்சுது. எங்களுக்கு இருக்க வீடில்லை. தோட்டஞ் செய்ய நிலமில்லை. இந்த நிலைமையிலை இன்னும் கலியாணமாகாத இரண்டு குமர்களையும் வைச்சுக்கொண்டு நான் என்ன செய்யப்போறன்?

இன்னும் இரண்டு நாட்களுக்கை பள்ளிக்கூடத்தை விட்டு எல்லாரையும் போகச் சொல்லிப் போட்டினம். அண்டைக்கு வந்த எம்.பீ யிலை ஒருத்தர் தான் மந்திரியோட கதைச்சு, எங்களுக்கு ஏதேனும் நிவாரணம் உதவி எண்டு வேண்டித் தாறன் எண்டு சொல்லியிருக்கிறுர். அவர் அப்படிச் செய்வாரோ என்னவோ தெரியாது. ஆர் எப்பிடிச் செய்தாலும் என்ரை மூத்தவளின்ரை நிண்டுபோன கலியாணம் இனி எப்பதான் நடக்கப் போகுது? என்ரை குடும்பத்திலை சந்தோஷத்தை எப்ப காணப் போறன்?

[யாவும் கற்பனை]

## வாழ்வளித்தவன்

[26-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்கையின் கெதி இப்படியா ஆக வேண்டும்? இறைவா, ஏன் எங்களைப் போன்ற எளியோரை இப்படிச் சோதிக்கின்றுய்...! என்று புலம்பிக்கொண்டே கட்டிலில் போய் குப்புற விழுந்தான். இதனைக் கண்ட அனைவரும் கல்லாய்ச் சமைந்தனர். 'ராஸிக் என்ன நடந்துவிட்டது. நடந்ததைத் தான் சொல்லேன்' என்று விரைந்து கேட்டான் ரஸாக்.

குழந்தை போலத் தேம்பித் தேம்பி நடந்ததைக் கூறிஞன் ராஸீக்.

நீண்டநேர மௌனத்தின் பின் ரஸாக் நிமிர்ந்தான்.

'ராஸீக், உனக்கு விருப்பமாயின் நானே உன் தங்கையை ஏற்றுக்கொள்கின்றேன்... என்ன சொல்கிருய்?'

ராஸிக் ரஸாக்கைக் கட்டியணைத்துக்கொண்டு கதறியழுதான்.

'இறைவா! இந்த ஏழையின் கண்ணீரிலா இந்த இன்ப விளக்கை ஏற்ற நினைத்தாய்! உன்னை என்னென்று புகழ்வேன்!'

[யாவும் கற்பனை]

*With best Compliments of*

□

□

**SCIENCE HOUSE [Ceylon] LTD.**

1st Floor Mansoor Building, 53, Main Street, Colombo-11.

# SHEILA

For Her Glamorous Range of Textiles

- Sheila Manipuri Sarees
- Floral Bri Nylon Sarees
- Textilex - Furnishing Material

**M/S. SHEILA WEAVING FACTORY,**

PADUKKA.

பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

# யானை பீடி ஸ்பெஷல்

## குணம் மணம் நிறைந்தது

## ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும், தனக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக் கொண்டதும்

## ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும், எங்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடியதும்

## ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே!

உள்நாட்டுக் கைத்தொழிலுககு ஊக்கமும், ஆக்கமும் அளியுங்கள்!

தயாரிப்பாளரும் விநியோகத்தர்களும்:

# யானை பீடி கம்பெனி,


130, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

தொலைபேசி: 31651.

Registered as a News Paper at G.P.O   Regd No. QD—934

விற்பனையாகிறது
நீர்வை பொன்னையனின்
உதயம்
(சிறுகதைத் தொகுதி)
விலை ரூபா 2,
கிடைக்குமிடம்
ச. இருஷ்ணசாமி
33, பெரியகடை, யாழ்ப்பாணம்

நான் ஆதரிப்பது நீடித்து உழைக்கவல்ல
நம்பிக்கைக்குரிய "முயல் மார்க்" நூலையே!



வானவில் வர்ணங்களில்
வகைவகையான
"முயல் மார்க்"
தையல் நூல்களை எங்கும்
பெற்றுக் கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட் மனுபக்சரிங்**
**கம்பெனி,**

கொழும்பு-12




101/4 சென் பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனையிலுள்ள சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. கவர், இல.27 பீர் சாய்பு வீதியிலுள்ள எம். ஜி. எம் பிரிண்டிங் இன்டஸ்றீஸில் அச்சிடப்பட்டது.